பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 11 புதன்கிழமை 24.03.2021 கதிர் 139

### இனிது ரகசியம் அல்ல!

கமல்ஹாசன் நடித்த 'நாயகன்' படம் பலருக்கும் நினைவிருக்கும். இறுதிக் கட்டத்தில் ஒரு காட்சி. நீதிமன்றுக்கு அழைத்து வரப்படுவார் வேலு நாயக்கரான கமல்ஹாசன். நீதிமன்ற முன்றிலில், அதுவரைப் பிரிந்திருந்த மகள் தந்தையைப்

பக்கம்02

## யாழில் கட்டுமீறும் கொரோனா; நேற்றும் 21 பேருக்குத் தொற்று

### மரக்கறிச் சந்தையில் 9 வியாபாரிகள் அடையாளம்



வடக்குமாகாணத்தில்மேலும் 23 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது. இதில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டும் 21பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவை கள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

2

## கொரோனா கொத்தணி அபாயம்

### யாழ். நகர் மரக்கறிச் சந்தை மறு அறிவித்தல் வரை பூட்டு

யாழ்ப்பாணம் மாநகரில் உள்ள மரக்கறிச் சந்தைத் தொகுதி மறு அறிவித்தல்வரைமூடப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதாரசேவைகள்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மரக்கறி, பழங்கள், உள்ளூர்உற்பத்திகள் மற்றும் வெற்றிலைக் கடைகள் அடங்கிய சந்தைப் பகுதி மாத்திரம்

2

# மாகாணத் தேர்தல்களை விரைந்து நடத்துங்கள்!

## ஜெனிவா அமர்வில் இலங்கையிடம் இந்தியா பகிரங்கமாகக் கோரிக்கை

ஜெனிவா, மார்ச் 24

மாகாணசபைத் தேர்தல்களை விரைந்து நடத்துவதன் மூலமும் -

இலங்கை அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அமைவாக அனைத்து மாகாணங்களும் ஆக்கபூர்வமாகச் செயற்படுகின்றமையை உறுதிப்படுத்துவதன் மூலமும் -

அவை உட்படஅரசியல் அதிகாரப் பகிர்வுக்குத் தான் வழங்கிய உறுதி மொழிகளை இலங்கை நிறைவு செய்ய வேண்டும் என்ற சர்வதேச சமூகத்தின் கோரிக்கையை இந்திய அரசு ஆதரித்து நிற்கின்றது.

- இவ்வாறு ஜெனிவாவில் வைத்து அறிவித்திருக்கின்றது இந்தியா.

2

## தீர்மானம் வெற்றி பெறக் காரணமாக இருந்த நாடுகளுக்குக் கூட்டமைப்பு நன்றி தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றிய நாடுகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நன்றி தெரிவித்துள்ளது.

தீர்மானத்தைக் கொண்டுவந்த பிரிட்டன் உள்ளிட்ட இணை அனுசரணை நாடுகளுக்கும், தீர்மானத்தை ஆதரித்த நாடுகளுக்கும் தமிழ் மக்களின் சார்பிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பிலும் நன்றிகளைத் தெரிவித்துகொள்கின்றோம் என்று கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அதேவேளை, வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் நடுநிலை வகித்த இந்தியாவுக்கு மூன்று வகைகளில் நன்றியை அவர் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கு ஆதரவாக இருக்கின்றோம் என்று ஜெனிவாவில் தெரிவித்தமைக்காகவும், தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுடன் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்தமைக்காகவும், மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்த வேண்டும் என்று

2



## இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஐ.நாவில் நேற்று நிறைவேற்றம்!

### 22 நாடுகள் ஆதரவு; எதிர்த்தவை 11 இந்தியா உட்பட 14 நாடுகள் நடுநிலை



ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின்

2

## நடுநிலை வகித்த இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு இலங்கை அரசு பாராட்டு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்காமல் நடுநிலை வகித்த இந்தியா உள்ளிட்ட 14 நாடுகளையும் இலங்கை அரசு பாராட்டியுள்ளது.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான 46/1 தீர்மானம் 22 வாக்குகளுடன்

2

## ஐ.நாவின் தீர்மானம் இலங்கைக்கு 'அடி!'

### முன்னாள் எம்.பி. சரவணபவன் தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசுக்கு எதிராக நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம், தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட

2

## அரசின் அலட்சியப்போக்கால் இலங்கை மீது புதிய தீர்மானம்

### அமெரிக்கத் தூதுவர் சுட்டிக்காட்டு

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது நிறைவேற்றப்பட்ட தீர்மானம், அனைத்து மக்களினதும் உரிமைகளை உறுதிசெய்கின்றது என இலங்கைக்கான அமெரிக்கத்

2

புதிய பிரிவு A/L 2023 கணக்கீடு

திரு. க. பா. பாலகஜன்
M.Com (Hons), B.Com (Jaf.),H.N.Dip.-in. ACC.,Dip.-in-Edu.

பிரத்தியேக மற்றும் குழு வகுப்புகள்
கொழும்புத்துறை -சனி, ஞாயிறு 2.15 PM - 3.30 P.M
கந்தர்மடம் - சனி, ஞாயிறு 7.00 A.M - 8.00 A.M
Zoom class - திங்கள், வெள்ளி 7.30 PM - 8.30P.M
புதிய அனுமதிகளுக்கு அழையுங்கள்
077 216 8884

A/L 2021 & DAY, A/L 2022 வகுப்புகளும் நடைபெறுகின்றன.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பார்ப்பாள். கையோடு பேரன் வந்திருப்பான். மூன்று, நான்கு வயதுச் சிறுவனான பேரனை முதல் தடவையாகக் காணும் வயோதிப வேலு நாயக்கர், சிறுவனை அன்போடு அவரணைப்பார். அப்போது பேரன் ஒரு கேள்வி கேட்பான். *"தாத்தா! நீ நல்லவரா? கெட்டவரா?"* – பதில் கூற முடியாது திகைத்து நிற்பார் வேலுநாயக்கர்.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை விவகாரத்தை ஒட்டி புதுடில்லி நடந்து கொண்ட விதத்தைப் பார்க்கும் ஈழத் தமிழர்களின் மனத்தில் இந்தியாவிடம் இப்படி ஒரு கேள்வி கேட்கவே தோன்றும்.

ஈழத் தமிழருக்கு இந்தியா நல்லதாக நடந்து கொண்டதா? அல்லது கெட்டதாக நடந்து கொண்டதா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனில் இருந்து புலம் பெயர்ந்த தரப்புகள் வரை ஜெனிவாவில் இந்தியா நடந்து கொண்ட விதம் தொடர்பில் பாராட்டு மழை பொழிகின்றார்கள். நன்றி கூறிக் களிக்கின்றார்கள்.

இவ்வளவுக்கும் இந்தியா வாக்கெடுப்பில் மதில் மேல் பூனையாகத்தான் இருந்தது.

எனினும், பகிரங்க அறிக்கையில் தான் இலங்கைத் தமிழர்கள் பக்கம் நிற்பதாகவும், மாகாண சபைத் தேர்தல்களை விரைந்து நடத்தும்படியும், அதிகாரப் பகிர்வை முழு அளவில் நிறைவேற்றும் படியும் இந்தியா ஜெனிவாவில் கோரியிருப்பதை அவர்கள் எல்லோரும் சிலாகிக்கின்றனர்.

எனக்கு என்னவோ தமிழகத் தேர்தல் நடக்க இருப்பதால் இப்படிப் பம்மாத்துக் காட்ட வேண்டிய கட்டாயம் இந்திய ஆட்சிப் பீடத்துக்கு இருப்பதாகவே தோன்றுகின்றது. அதற்கான வண்டவாளமாகத்தான் இந்தியாவின் இந்தப் பீற்றலைக் கணிப்பிட வேண்டும்.

அப்படி நான் கூறுவதற்கு ஒரு காரணம் உண்டு.

இந்தத் தடவை நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானத்துக்கான அடிப்படை, இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமையாளர் ஆணையாளரின் காட்டமான அறிக்கைதான். அந்த அறிக்கையின் அடிப்படையில் இருந்துதான் – கட்டமைப்பில் இருந்துதான் – இம்முறை இலங்கைக்கு எதிரான இந்தத் தீர்மானத்தைக் கட்டி எழுப்பியது பிரிட்டன் உள்ளிட்ட சர்வதேச சமூகம்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான அவதானிப்பு அறிக்கையில் இலங்கையில் மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டோருக்கு எதிராக அங்கத்துவ நாடுகள் பயணத்தடை, சொத்து முடக்கம் மற்றும் இன்னோரன்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றெல்லாம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை வெளியானதுமே இலங்கை சீறியது. அதை நிராகரித்து ஆணையாளர் தமது அதிகார எல்லையை – தனக்கு ஐ.நா. வழங்கிய ஆணையை – மீறி இந்தப் பரிந்துரை அறிக்கையை முன்வைத்துள்ளார் என்றெல்லாம் இலங்கை முறையிட்டது.

இலங்கையின் அந்த நிலைப்பாட்டை அங்கீகரிக்குமாற் போன்ற வாசகம், இந்தியா நேற்று ஜெனிவாவில் சமர்ப்பித்த அறிக்கையில் தெளிவாக உள்ளது.

மனித உரிமைகள் ஆணையாளரின் அந்த அவதானிப்பு அறிக்கை அவரின் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டது.

*"மனித உரிமைகள் ஆணையாரின் அலுவலகத்தின் பணிகள், அது தொடர்பாக ஐ.நா. பொதுச்சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு – ஆணைக்கு – அமைவாக இருக்க வேண்டும் என்று நாங்கள் கருதுகின்றோம்."* – என இந்தியா நேற்றுத் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இதன் மூலம் இந்தியா கூற வருவது என்ன? ஆணையாளரின் பரிந்துரையை நிராகரித்து இலங்கை விடுத்த அறிவிப்பை அங்கீகரிக்கும் ஒரு நிலைப்பாட்டைத் தானே இந்த வாசகம் ஊடாக இந்தியா பிரதிபலிக்கின்றது...?

ஆணையாளரின் அந்தப் பரிந்துரையை நிராகரிப்பது – அல்லது புறந்தள்ளுவது – என்பது அதனை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்ட – இலங்கை தொடர்பான – தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள – தீர்மானத்தின் அடிப்படையையே நிராகரிப்பதற்கு ஒப்பாகாதா?

அப்படிப்பட்ட அறிக்கையை வெளியிட்ட புதுடில்லியை தமிழர் தரப்பு மெச்சலாமா என்ற கேள்வி நியாயமாகவே எழுகின்றது.

அதனால்தான் ஜெனிவா விவகாரத்தில் இந்தியா நடந்து கொண்ட விடயத்தைப் பார்த்து அதன் அடிப்படையில் *"நீ நல்லவனா? அல்லது கெட்டவனா?"* – என்று 'நாயகன்' படம் பாணியில் – இந்தியாவைக் கேட்க வேண்டிய நிலையில் இலங்கைத் தமிழர்கள் உள்ளனர் என்றேன் நான்.

உங்கள் கருத்து என்னவோ வாசகர்களே...?

– மின்னல் –

## நடுநிலை வகித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் நடுநிலை வகித்த இந்தியா, இந்தோனேஷியா, ஜப்பான், லிபியா மற்றும் சூடான் உள்ளிட்ட 14 நாடுகளுக்கு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து ருவிட்டரில் பதிவிட்டுள்ள அவர், பிரேரணையை எதிர்த்து இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த 11 நாடுகளின் உறுதியான ஆதரவுக்கும் அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

## தீர்மானம் வெற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை அரசை வலியுறுத்தியமைக்காகவும் இந்தியாவுக்கு மூன்று வகைகளில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறினார்.

இதேவேளை, ஐ.நா. தீர்மானத்திலுள்ள பரிந்துரைகளே சர்வதேசத்தின் நிலைப்பாடு எனவும், இதை உணர்ந்து இலங்கை அரசு செயற்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனும் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டுவந்த பிரிட்டன் தலைமையிலான நாடுகளுக்கும், தீர்மானத்தை ஆதரித்த நாடுகளுக்கும் நன்றி தெரிவித்தார்.

## அரசின் அலட்சியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

ருவிட்டர் தகவல் ஒன்றைப் பதிவுசெய்துள்ள அமெரிக்கத் தூதுவர், ஐ.நாவின் புதிய தீர்மானம் நீதி வழங்குவதிலும் பொறுப்புக்கூறலிலும் இலங்கையின் தொடர்ச்சியான முயற்சிகளை அங்கீகரிப்பதாகவும் கூறியுள்ளார்.

அவ்வாறே, இலங்கை அரசின் கடந்த கால ஆணைக்குழுக்களின் வாக்குறுதிகளும் பரிந்துரைகளும் நிறைவேற்றப்படாமல் போய்விட்டன என்பதையும் இந்தத் தீர்மானம் அங்கீகரித்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை உறுதியான, அனைத்துத் தரப்பினரையும் உள்வாங்கிய ஓர் எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமானால், கடந்த காலத்தின் வலி மிகுந்த விடயங்களுக்குத் தீர்வு காணவேண்டும் என்றும், எல்லாப் பிரஜைகளினதும் உரிமைகளை உறுதிசெய்யவும் வேண்டும் என்றும் அலெய்னா டெப்லிட்ஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஐ.நா. தீர்மானத்துக்கான இணை அனுசரணை நாடு என்ற அடிப்படையில், இலங்கையின் நீண்டகால அமைதி மற்றும் சுபீட்சத்துக்காக அமெரிக்கா அர்ப்பணிப்புடன் உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கொரோனா கொத்தணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறு மூடப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் மாநகர மரக்கறிச் சந்தைத் தொகுதியில் எழுமாறாக 60 பேரிடம் நேற்று மாதிரிகள் பெறப்பட்டன. அவர்களில் 9 வியாபாரிகளுக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 6 உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் (பனம் பொருள்கள்) வியாரிகளும், 3 மரக்கறி வியாபாரிகளும் அடங்குகின்றனர்.

அதனால் சந்தைத் தொகுதியின் அத்தனை வியாபாரிகளும் சுயதனி மைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் கூறினார்.

## இலங்கைக்கு எதிரான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

46 ஆவது அமர்வில் பிரிட்டன் தலைமையிலான 6 நாடுகள் இலங்கைக்கு எதிராக முன்வைத்த தீர்மானமே இவ்வாறு வெற்றியடைந்துள்ளது.

இலங்கை மீதான தீர்மானத்துக்கு ஆதரவாக 22 நாடுகளும், எதிராக 11 நாடுகளும் வாக்களித்துள்ளன.

இந்தியா, ஜப்பான் உட்பட 14 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

இந்தத் தீர்மானம் இலங்கைக்கு எதிரானது அல்ல என்றும், இலங்கையில் அனைவருக்கும் நீதியை நிலைநாட்டுவதற்கான தீர்மானம் என்றும் பிரிட்டனின் பிரதிநிதி ஜெனிவாவில் நேற்று தெரிவித்துள்ளார்.

இலங்கை மீதான தீர்மானம் அனைத்து நாடுகளின் இறையாண்மைக்கும் சவாலாக அமைந்துள்ளது எனத் தீர்மானம் மீதான விவாதத்தில் இலங்கையின் பிரதிநிதி தெரிவித்துள்ளார். குறித்த தீர்மானம் ஐ.நாவின் அடிப்படை உடன்படிக்கைகளுக்கு முரணானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமை நிலைமைகளை ஐ.நா. அரசியல் மயப்படுத்தியுள்ளது என்று தெரிவித்துள்ள சீனா, இலங்கை மீதான தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இதேநேரம், இலங்கை மீதான ஐ.நா. தீர்மானம் அரசியல் நோக்கம் கொண்டது எனத் தெரிவித்து, பிலிப்பைன்ஸும் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்துள்ளது.

எனினும், 22 நாடுகளின் ஆதரவுடன் இலங்கைக்கு எதிரான தீர்மானம் வெற்றியடைந்துள்ளது.

ஆர்ஜென்ரீனா, ஆர்மேனியா, ஒஸ்ரியா, பஹாமஸ், பிரேசில், பல்கேரியா, ஐவரிகோஸ்ற், செக் குடியரசு, டென்மார்க், பிஜி, பிரான்ஸ், ஜேர்மன், இத்தாலி, மாலாவி, மார்சல் ஐலன்ட், மெக்ஸிகோ, போலன்ட், தென் கொரியா, உக்ரெய்ன், பிரிட்டன், உருகுவே, நெதர்லாந்து ஆகிய 22 நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளன.

சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், சோமாலியா, பங்களாதேஷ், கியூபா, பொலிவியா, எரித்திரியா, உஸ்பெகிஸ்தான், வெனிசுலா ஆகிய 11 நாடுகள் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்துள்ளன.

## யாழில் கட்டுமீறும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வு கூடங்களில் 600 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போதே, 23 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட யாழ்.நகர் 2ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஏற்கனவே தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களுடன் தொடர்புடைய 9 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் மரக்கறிச் சந்தைத் தொகுதியில் எழுமாறாக 60 பேரிடம் நேற்று மாதிரிகள் பெறப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டதில் 9 பேருக்குத் தொற்று கண்டறியப்பட்டது.

இதில் பனை உற்பத்திப் பொருள்கள் வியாபாரிகள் 6 பேரும், மரக்கறி வியாபாரிகள் 3 பேரும் அடங்குகின்றனர்.

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவர் அடையாளம் காணப்பட்டனர். இவர்கள் இருவரும் காரைநகர் இ.போ.ச. பஸ் பணியாளரின் குடும்ப உறுப்பினர்கள்.

## ஐ.நாவின் தீர்மானம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அநீதிகளுக்கு நீதி பெறும் நடவடிக்கையின் ஒரு படிக்கல் என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

நேற்று ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வில் இலங்கை அரசுக்கு எதிராக நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பாக ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குப் பொறுப்புக்கூறுவதில் இருந்து தப்பிக்கொள்ள முனையும் இலங்கை அரசுக்கு, ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஓர் அடியாகவே இருக்கும்.

இந்தத் தீர்மானத்தில் தமிழ் மக்கள் எதிர்பார்த்த பல விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை. இது தமிழ் மக்களுக்கு ஏமாற்றமாக இருந்தாலும், இந்தத் தீர்மானம் சரியான முறையில் செயற்படுத்தப்பட்டால் எதிர்காலத்தில் இலங்கை அரசை சர்வதேச விசாரணைப் பொறிமுறையை நோக்கி உந்தித் தள்ள முடியும்.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி பெறும் நடவடிக்கையின் ஒரு படிக்கல் இந்தத் தீர்மானம் என்று கூறமுடியும். இலங்கை தொடர்ந்தும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கண்காணிப்பில் இருப்பதற்கும் இந்தத் தீர்மானம் உதவும்.

ஐ.நாவில் பிரேரணையைக் கொண்டு வந்த நாடுகளும், அதற்கு ஆதரவளித்த நாடுகளும் அத்தோடு நின்றுவிடாது இலங்கை அரசுக்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும். தீர்மானத்தில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்த ஆவன செய்ய வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்ப்பார்ப்பு – என்றார்.

## மாகாணத் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது அமர்வில் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறுதல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் குறித்த தீர்மானம் மீதான வாக்கெடுப்புக்கு முன்னர் இந்தியத் தரப்பு முன்வைத்த அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் முழு விவரம் வருமாறு:–

இவ்வாறான முயற்சிகளுக்கு ஆதரவாக ஐ.நா. சாசனத்தின் நோக்கங்கள் மற்றும் கொள்கைகள் ஆகியவற்றால் வழி நடத்தப்படும் மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு, ஆக்கபூர்வமான சர்வதேச பேச்சுக்கள் மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றுக்காக, நாடுகளினது முதன்மை பொறுப்பின் மீது இந்தியா நம்பிக்கை கொண்டுள்ளது..

மிகவும் நெருங்கிய அயல் நாடு என்ற ரீதியில் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் நிவாரணம், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு ஆகிய செயற்பாடுகளுக்கு இந்தியா பங்களிப்பினை வழங்கி யுள்ளது.

குறிப்பாக வடக்கு, கிழக்கு உட்பட இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் வாழ்வாதார மறுசீரமைப்பு ஆகிய விடயங்கள் மீதான அக்கறையுடன் எமது அபிவிருத்தி உதவித் திட்டங்கள் அமைந்துள்ளன.

இலங்கையில் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான இந்தியாவின் அணுகுமுறையானது இரு அடிப்படை விடயங்களால் வழி நடத்தப்படுகின்றது. சமத்துவம், நீதி, கௌரவம் மற்றும் சமாதானம் ஆகியவற்றுக்காக இலங்கை தமிழர்களுக்கான எமது ஆதரவு இதில் ஒன்றாக அமைகின்றது. மற்றொன்று, இலங்கையின் ஸ்திரத்தன்மை, ஐக்கியம் மற்றும் ஆட்புல ஒருமைப்பாடு ஆகியவற்றினை உறுதிப்படுத்துவதாக அமைகின்றது. இவ்விரு இலக்குகளும் பரஸ்பரம் உறுதுணையானவை என நாம் எப்பொழுதும் நம்புகிறோம். அத்துடன் சமநேரத்தில் இந்த இரு இலக்குகளுக்கும் முகம் கொடுப்பதன் மூலம் இலங்கையின் முன்னேற்றமானது சிறப்பாக அமையும்.

இலங்கை அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கு அமைவாக சகல மாகாண சபைகளும் வினைத்திறன் மிக்க ரீதியில் செயற்படுவதற்கு வழி சமைக்கும் வகையில் மாகாணசபை தேர்தல்களை முற்கூட்டியே நடத்துதல் உள்ளிட்ட அரசியல் அதிகார பகிர்வு மீதான இலங்கை அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை நிறைவேற்றுவதற்காக சர்வதேச சமூகத்தினால் விடுக்கப்பட்ட அழைப்புக்கு இந்தியா ஆதரவினை தெரிவிக்கின்றது.

இதேநேரம் ஐக்கிய நாடுகள் சபை பொதுச் சபை அமர்வின் தீர்மானங்களால் வழங்கப்பட்ட ஆணைக்கு அமைவாக மனித உரிமைகள் பேரவை ஆணையாளரின் அலுவலகத்தினது செயற்பாடுகள் ஒத்திசைவாக அமையும் எனவும் நாம் நம்புகிறோம்.

இலங்கையிலுள்ள சகல பிரஜைகளினதும் அடிப்படை சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் முழுமையாக பாதுகாக்கப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்காக சர்வதேச சமூகத்துடன் செயல்திறன்மிக்க ஈடுபாட்டினை தொடரவேண்டும் எனவும், அதேபோல தமிழ் சமூகத்தின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு நல்லிணக்க செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவேண்டுமெனவும் இலங்கை அரசாங்கத்தை நாம் வலியுறுத்துகிறோம். – என்று உள்ளது.

# மக்கள் சக்தி எம்.பிக்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்!



ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள், சுற்றாடல் அழிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டமொன்றை நேற்று (செவ்வாய்க் கிழமை) மேற்கொண்டிருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் நாடாளுமன்றத்துக்கு அருகிலுள்ள வளாகத்தில், நேற்று முற்பகல் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா உள்ளிட்ட முக்கிய அரசியல் வாதிகள் பங்கேற்றிருந்தனர்.

இதேவேளை உயிர்மூச்சை காப்பாற்றிக்கொள்ள கொழும்பிற்கு வாருங்கள் என்ற தொனிப்பொருளில், சுற்றாடல் பாதுகாப்பை வலியுறுத்தி மக்கள் விடுதலை முன்னணி பாரிய ஆர்ப்பாட்டமொன்றை கடந்த திங்கட்கிழமை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பஹ்ரைன் நாட்டு துணை மன்னருடன் மஹிந்த தொலைபேசி உரையாடல்!

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கும் பஹ்ரைனின் துணை மன்னருக்கும் இடையில் தொலைபேசி மூலமான கலந்துரையாடலொன்று இடம்பெற்றிருப்பதுடன் இதன்போது இருதரப்பு உறவுகளை மேலும் விரிவுபடுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

இது தொடர்பாகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்யப்பட்டிருக்கும் பதிவில் கூறப்பட்டிருப்பதாவது –

பஹ்ரைனின் துணை மன்னர் சல்மான் பின் ஹமட் அல் கலிஃபாவுடனான தொலைபேசி உரையாடலின் போது இருநாடுகளுக்கும் இடையிலான தொடர்புகள் மற்றும் எதிர்காலத்தில் இருதரப்பு உறவுகளை மேலும் விரிவுபடுத்தக்கூடிய துறைகள் பற்றிப் பேசினோம்.

அத்தோடு நான் ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலப்பகுதியில் நாட்டில் நிலைபேறான சமாதானத்தையும் உறுதிப்பாட்டையும் ஏற்படுத்துவதற்காக முன்னெடுத்திருந்த முயற்சிகளை பஹ்ரைனின் துணை மன்னர் நினைவுகூர்ந்தமையுடன் அவற்றுக்குத் தனது பாராட்டையும் தெரிவித்தார் என்று அப்பதிவில் குறிப்பிடப்பிட்டுள்ளது.

# சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடியபின் அழகு சாதனப் பொருள்கள் இறக்குமதி!

## நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவிப்பு

அழகுசாதனப் பொருள்களின் இறக்குமதியை முறையாகக் கட்டுப்படுத்த சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடி முடிவொன்றை எட்ட வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.



நாடாளுமன்றில் நேற்று (செவ்வாய்க்கிழமை) வாசனைத் திரவியங்கள் மற்றும் அழகுசாதன பொருள்கள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸாமில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அழகுசாதனப் பொருள்களின் இறக்குமதி கடந்த சில ஆண்டுகளில் 100 சதவீதம் அதிகரித்துள்ளது என்றும் மொஹமட் முஸாமில் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் ஒரு தரத்துக்கு ஏற்ப குறித்த பொருள்களை இறக்குமதி செய்கின்றமை தொடர்பாக சுகாதார அமைச்சின் ஒத்துழைப்புடன் முறையான திட்டம் செயற்படுத்தப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் குறிப்பிட்டார்.




# நல்லவர்

இறைவன் எமது நல் ஆயனாகி அன்புத் தந்தையாய் இருக்கும்பொழுது எமக்கு எல்லாம் நிறைவாய் கிடைக்கின்றது. ஆனால் பொறுப்பற்ற குடிகாரத் தந்தையின் பிள்ளை கடவுளை ‘அப்பா’ என்று கூவி அழைப்பது மிகவும் கடினமான ஒன்றாகும்.

இறைவன் எப்பொழுதும் வல்லவரும் நல்லவருமான அன்புத் தந்தையாகவே இருக்கின்றார். ‘அப்பா நல்ல தந்தாய்’ என்றே இறைவனைப் புனித குழந்தை இயேசுவின் தெரேசா அழைக்கின்றார்.

“நீங்கள் பெற்றுக் கொண்டது திருப்பவும் அச்சத்திற்கு உள்ளாக்கும் அடிமையுள்ளம் அன்று. பிள்ளைகளாக்கும் ஆவியையே பெற்றுக்கொண்டீர்கள். அந்த ஆவியினால்த்தான் அப்பா, தாய் எனக் கூப்பிடுகின்றோம்” (உரோ மையர் 8:15)

படைத்தவன் படியளப்பான் என்பதற்கு ஒப்ப, இறைவன் எமது தேவைகள் நிறைவு செய்வதில் வல்லவராகி, கரிசனையோடு எம்மைக் கண்காணித்து காப்பவராக இயங்குகின்றார்.

நல்ல ஆயர் தனது ஆடுகளை நல்ல மேய்ச்சல் நிலத்திற்கு அழைத்துச் செல்வதில் அக்கறையுடையவராக முன் நடப்பார். நாம் இன்புற்று வாழ அருள் வளங்களையும் அன்பு வளங்களையும் ஈய்வது இறைவனது இயல்பாகும். எமது ஆயனான இறைவன் எமது வரையறைகளை அறிந்தவராய் எம்மை ஏளனம் செய்யாது குறைகளோடும் நிறைகளோடு ஏற்றுச் செயல்படுகின்றார். எம்மால் இயலாதவற்றைச் செய்ய வேண்டும் என அவர் கட்டாயப்படுத்துவதில்லை மாறாக அவர் எமது சுமைகளை இலகுபடுத்தி, வாழ்வினை இனி தாக்குகின்றார்.

எமது வாழ்வில் ஏற்படும் சோதனைகள், வேதனைகள் போன்றவற்றை வென்று, சாதனை நிலைநாட்ட, ‘போதனையில் புள்ளிகள் நூறு, சாதனையில் பூச்சியம்’ என்ற நிலைப்பாட்டை மாற்றியமைக்க இறை பராமரிப்பிற்கு எம்மை அர்ப்பணிப்போம்.

அமைதி, இறைவனோடு தனித்திருந்து வேண்டுதல் செய்தல், குழவாக நற்காரியங்களில் ஈடுபடல், இனிதே பேசி கனிவுடன் இயங்குதல் போன்றவற்றை முன்னெடுத்து முன்னேற முயற்சி எடுப்போம்.

புளோரிடாவில் பாடும் கோபுரத்தில் பொறிக்கப்பட்ட “இங்கு நாம் வந்திருப்பது எம்மைக் கண்டுபிடிக்க; ஏனெனில் உலகில் எம்மை இலகுவில் இழந்து விடலாம்” என்ற வலிகளை எமது மனங்களில் மீள்பதிவு செய்து, மகிழ்ந்து, மகிழ்விப்போம்.

– கலாநிதி டேவிற் வி.பற்றிக். அ.ம.தி.

# நாடு திரும்பியவர்களில் 40 பேருக்குத் தொற்று!

கொழும்பு, மார்ச் 24

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்களில் மேலும் 40 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக கொவிட் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

24 மணித்தியாலங்களில் மேலும் 314 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

அவர்களில் 40 பேர் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்கள் என கொவிட் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

ஏனைய 274 பேர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் கண்டறியப்பட்டுள்ளனர்.

அதன்படி, 52 பேர் திருகோணமலை மாவட்டத்தில் இருந்தும் 30 பேர் களுத்துறை மாவட்டத்தில் இருந்தும் 29 பேர் கம்பஹா மாவட்டத்திலிருந்தும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஏனைய 163 பேரும் ஏனைய மாவட்டங்களில் இருந்து அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 90 ஆயிரத்து 514ஆக அதிகரித்துள்ளது.

மேலும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நாட்டில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 551 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் கிரவல் அகழ்வை நேரில் ஆராய்ந்த கூட்டமைப்பு!

## சுமந்திரன், சாணக்கியன், சத்தியலிங்கம் கள விஜயம்





வவுனியா – ஓமந்தை – கள்ளிக்குளம் பகுதியில் இடம்பெறுகின்ற கிரவல் அகழ்வு தொடர்பில் கிராம மக்கள் மற்றும் கிராம அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டையடுத்து அப்பகுதிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழாம் கடந்த திங்கட்கிழமை நேரில் சென்று பார்வையிட்டிருந்தனர்.

வவுனியா – ஓமந்தை – கள்ளிக்குளம் பகுதியில் இடம்பெறுகின்ற கிரவல் அகழ்வு தொடர்பாக அபிவிருத்தி குழுக்கூட்டங்கள் மற்றும் ஏனைய கூட்டங்களில் பல தடவைகள் பொது அமைப்புகளால் குறித்த விடயங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டியும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்காத நிலையில் குறித்த விடயத்தை ஆராயும் முகமாக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், முன்னாள் மாகாண அமைச்சர் சத்தியலிங்கம் உள்ளிட்ட குழுவினர் அந்தப் பகுதிக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இதன் போது கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் –

இந்த சூழல் பாதுகாப்பு தொடர்பாக எல்லா மாவட்டங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற இருக்கின்றன. சிங்கராஜாவனம் அழிக்கப்படுகின்றது என கூறி ஒரு சிறுமி தென்னிலங்கையிலே பாரிய போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருக்கின்றார். அரசாங்கத்தோடு இணைந்து செயற்படுகின்ற பலர் இந்த வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றார்கள். இங்கும் மிக மோசமாக சுற்றுச்சூழல் பாதிப்படைவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

காடழிப்பு மற்றும் மண் அழிப்பு என்பன கொடுக்கப்படுகின்ற அனுமதிக்கு மேலதிகமாக அழிக்கப்படுகின்றது. நாங்கள் இங்கு வருகின்ற போது மண் அகழ்வில் ஈடுபட்டவர்கள் ஓடிவிட்டார்கள். இவ்வாறு தப்பி ஓடியதில் இருந்தே தெரிகிறது சட்டவிரோதமாக மண் அகழ்கிறார்கள் என்று. இந்நிலைமை நாட்டில் இருக்கின்ற ஒரு மோசமான நிலையாக இருக்கின்றது. இதனை உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும். – என்றார்.

இந்தப் பகுதிகளில் தனியார் மற்றும் அரச காணிகளிலேயே இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இனி, அடுத்த கட்டம் என்ன?

ஜெனிவாத் திருவிழா – மஹோற்சவம் – முடிவடைந்து விட்டது.

எதிர்பார்க்கப்பட்டபடி, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிரான பிரேரணை 22இற்கு 11 என்ற அடிப்படையில் நிறைவேறி விட்டது.

யாழ்ப்பாணத்துச் சித்தர் யோகர் சுவாமியின் குருபூசைத் தினம் நாளை. அவரின் வார்த்தைகளில் கூறுவதானால் ஜெனிவாவில் நேற்று நடந்தேறியது *'எப்பவோ முடிந்த காரியம்!'*

பௌத்த, சிங்களப் பேரினவாதத்தை முன்நிறுத்தி, அதனை மேலாண்மை வெறியாக வெளிப்படுத்தி, அதன் மூலம் ஆட்சியதிகாரத்தைப் பிடித்த பேரினவாதிகள், தமது அந்த மேலாதிக்கக் கொள்கைப்போக்கையே சர்வதேச ஊடாட்டத்திலும் பின்பற்றிய போது இப்படித்தான் நடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அது நடந்தேறியிருக்கின்றது. அவ்வளவுதான்.

சரி, தீர்மானம் நிறைவேறியாகிவிட்டது. இனி என்ன என்பது தான் கேள்வி.

2015, 2017, 2019ஆம் ஆண்டுகளிலும் 30/01, 34/01, 40/01 இலக்கத் தீர்மானங்களும் இதேபோலத்தானே – இதே மனித உரிமைகள் பேரவையில்தானே – நிறைவேற்றப்பட்டன. இந்த ஆறு ஆண்டுகளிலும் ஏதேனும் மாற்றம் களத்தில் – அல்லது புலத்தில் – நடந்து விட்டதா? இனித்தானும் ஏதேனும் நடக்க வாய்ப்புண்டா?

– இதுதான் இத்தீர்மானம் போதிய பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்று பரபரப்புடனும் பதற்றத்துடனும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த தமிழர் தரப்பின் பிரதான கேள்வி.

ஒருவாறு தீர்மானம் நிறைவேறி விட்டது. இனி என்ன?

நிச்சயமாக – மிக உறுதியாக – முன்னர் இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டமைக்கும் இப்போது நிறைவேற்றப்பட்டமைக்கும் நிரம்ப வேறுபாடு உண்டு.

2015, 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இலங்கை தொடர்பான தீர்மானங்கள் ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட போது இலங்கையில் ஆட்சியிலிருந்த நல்லாட்சி அரசு இராஜதந்திரமாக – புத்திபூர்வமாக – நடந்து கொண்டது. அதனால் இராஜதந்திர நெருக்குவாரத்தில் – சிக்கலில் – நாட்டை மாட்ட விடாது காப்பாற்றிக் கொண்டது. ஆனால் கோட்டாபய அரசு, பேரினவாதத் திமிருடன் சர்வதேசத்துடன் முட்டி மோதி நடந்து கொண்டமை மூலம் சர்வதேச சிக்கலில் மாட்டிக் கொண்டு விட்டது.

விடயம், ஏற்கனவே இப்பத்தியில் நாம் சுட்டிக்காட்டியதுதான்.

முன்னைய மூன்று தீர்மானங்களும் இலங்கையும் சேர்ந்து அனுசரணைப் பணி வகிக்க நிறைவேற்றப்பட்டன. அதனால் தீர்மான வாசகங்களை நடைமுறைப்படுத்தி, செயற்படுத்தும் பொறுப்பு இலங்கையிடம் வீழ்ந்திருந்தது. தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட காலம் வரை – பெரும்பாலும் இரண்டு வருடங்கள் வரை – அவ்விடயங்களை இலங்கை நடைமுறைப்படுத்த விட்டு விட்டு, பார்த்திருக்கும் பொறுப்பு மட்டுமே சர்வதேசத்தினுடையதாக இருந்தது.

வழங்கப்பட்ட காலம் முடிந்து மீண்டும் அதே ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் விவகாரம் திரும்பவும் பரிசீலனைக்கு வரும்போதே சர்வதேச சமூகம் களத்துக்கு வரும். அதுவரையில் பந்து இலங்கைக் களத்துக்குள்தான். இலங்கை அந்தப் பந்தை விளையாடாமல் – ஏன் எதுவும் செய்யாமல் – சும்மா இருந்தால் (பெரும்பாலும் 2015 முதல் 2020 வரையான அந்த ஆறு வருடங்களும் அப்படித்தான் இலங்கை இருந்தது) கேட்பதற்கு யாரும் இல்லை என்பதுதான் நிலைமையாக இருந்தது.

இப்போது கள யதார்த்தம் அப்படியல்ல. இலங்கை தொடர்பான பிரேரணை வந்தபோதே அதனை எதிர்ப்பதாக கொழும்பு அறிவித்து விட்டது. இப்போது அந்த எதிர்ப்பையும் மீறி, சர்வதேச சமூகம் இலங்கைக்கு எதிரான பிரேரணையை பெரும்பான்மை நாடுகளின் ஆதரவுடன் தீர்மானமாக நிறைவேற்றியுள்ளது.

எனவே, இப்போது பிரேரணை வாசகத்தில் உள்ள விடயங்களை தீர்மானமாக நிறைவேற்றி விட்டு சர்வதேச சமூகம் சும்மா இருக்க முடியாது. பந்து அதன் களத்துக்குள். பந்தை ஆக்கபூர்வமான முறையில் விளையாடவேண்டிய பொறுப்பு சர்வதேசத்தின் கைகளில். தீர்மானத்தில் உள்ள விடயங்களை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுப்பதும், அந்த திசையில் தனது கடப்பாடுகளை நிறைவு செய்யும் விதத்தில் கொழும்பை உந்தித் தள்ளுவதும் சர்வதேசத்தின் கடமையாகின்றது.

ஆக, 2015, 2017, 2019ஆம் ஆண்டுகளில் இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மூலம் இலங்கை சர்வதேசத்தின் கண்காணிப்புக்குள் வைக்கப்பட்டிருந்தது.

இப்போதைய தீர்மானம் சர்வதேச கண்காணிப்புக்குள் இலங்கையை வைத்திருப்பது மட்டுமன்றி, அதையும் தாண்டி அது தொடர்பில் இலங்கையின் செயலின்மைக்கு எதிராக சர்வதேசம் தனது அழுத்த நடவடிக்கைகளை தீவிரமாக முன்னெடுக்கும் கட்டாயத்தையும் உருவாக்கியிருக்கின்றது.

அதன் விளைவுகளை சந்திக்கும் போதுதான் இவ் விடயத்தைக் கையாள்வதில் தான் இழைத்த இராஜதந்திர முட்டாள்தனம் கொழும்புக்கு புரிய ஆரம்பிக்கும்.

## வாக்களித்த மக்களின் அபிலாஷைகளை படுகுழிக்குள் அரசாங்கம் தள்ளிவிட்டது!

### சஜித் வேதனை

அரசாங்கம், தனது பொறுப்பற்ற செயற்பாடுகாரணமாக வாக்களித்த 69 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களின் அபிலாஷைகளை படுகுழிக்குள் தள்ளியுள்ளதென ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தற்போதைய செயற்றிட்டங்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது சஜித் பிரேமதாஸ மேலும் கூறியுள்ளவை வருமாறு – 'நாட்டில் ஊழல் மற்றும் மோசடி ஆகியன அதிகரித்துள்ளன.

இந்நிலையில் உண்மைத்தன்மையை வெளிப்படுத்தும் ஊடகங்களுக்கு எதிரான அச்சுறுத்தல் நீண்டுக்கொண்டு இருக்கின்றது.

அரசாங்கம் அதன் பொறுப்பற்ற செயற்பாடு காரணமாக வாக்களித்த அனைத்து மக்களினதும் அபிலாஷைகளை படுகுழிக்குள் தள்ளியுள்ளது.

பொய்களை பரப்புவதன் ஊடாக மக்கள் எதிர்ப்பை அதிகரித்து வரும் நிலையில், அரசாங்கம் அதற்கான தீர்வுகளைத் தேடுகிறது.

மேலும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் அரசாங்கத்தைச் சேர்ந்த சில அதிகாரிகளுக்கும் இடையில் கலந்துரையாடல்களும் கூட்டங்களும் நடந்துள்ளன என்ற ஆதாரமற்ற செய்திகளை உருவாக்குவது அரசாங்கத்தின் குறைந்த மனநிலைமையை காட்டுகின்றது. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பத்தேகமவில் கள்ள மரம் வெட்டிய பிரதேசசபை உறுப்பினருக்குப் பிணை!

பத்தேகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட திம்பில்ல வனப்பகுதியில் காடழிப்பில் மற்றும் மரக்குற்றிகளை வெட்டியமை தொடர்பில் 33 வயதுடைய பத்தேகம பிரதேச சபை உறுப்பினரொருவர்திங்களன்றுகைதுசெய்யப்பட்டுள்ளார்எனப்பொலிஸ்பேச்சாளர்பிரதிபொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

கைதுசெய்யப்பட்ட குறித்த பிரதேசசபை உறுப்பினர் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டமையின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பத்தேகம பொலிஸாரால் இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பிட்ட சில நபர்களால் இல்லாத அதிகாரங்களைப் பயன்படுத்தி வனங்களுக்கருகிலுள்ள பகுதிகளை வெள;வேறு நபர்களுக்கு வழங்குதல் உள்ளிட்டவை தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளன.

பொலிஸார் இது தொடர்பிலும் கண்காணிப்புக்களை முன்னெடுத்து வருகின்றனர். சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். – என்றார்.




யாழ்ப்பாணம் - வண்ணை, மணிக்கூட்டு வீதி அருள் மிகு ஸ்ரீ அரசடி விநாயகர் தேவஸ்தான மகா கணபதி ஹோமப் பெரு விழா நேற்றையதினம் வெகு சிறப்பாக இனிதே நடைபெற்றது.

## முகக்கவச உற்பத்தி இயந்திரங்களை நன்கொடையாக வழங்கியுள்ளது சீனா!




கொழும்பு, மார்ச் 24

சீனாவின் டி.எம்.ஐ. தொழில்துறை குழுமத்தால் இலங்கைக்கு 30 செட் தானியங்கி முகக் கவச உற்பத்தி இயந்திரங்களை கடந்த திங்கட்கிழமை நன்கொடையாக அளித்துள்ளது என்று இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

மேலும் 60 முகக்கவசங்களைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் அதி நவீன இயந்திரங்களையும் நன்கொடையாக வழங்கியுள்ளது.

இந்த நன்கொடைகளின் பெறுமதி 55 கோடி ரூபாவாகும்.

## தமிழ் - சிங்கள புத்தாண்டு காலத்தில் பேக்கரி பொருள்களின் விலை எகிறும்!

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தில் அனைத்து பேக்கரி பொருள்களின் விலையும் அதிகரிக்கும் என அனைத்து இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இறக்குமதி கட்டுப்பாடுகள், வரி மற்றும் பொருளகளின்விலைஅதிகரிப்புஆகியவையை அடிப்படையாக கொண்டே குறித்த அதிகரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக அந்தச் சங்கத்தின்தலைவர்என்.கே.ஜயவர்த்தனகுறிப்பிட்டார்.

எண்ணெய் மற்றும் வெண்ணெய்க்கு அதிக வரி விதிக்கப்படுவதால் பேக்கரி தொழில் கடுமையாகப் பாதிக்கப்படுவதாக பேக்கரி தொழிலை நடத்துவதில் உரிமையாளர்கள் பெரும் சிக்கலை எதிர்கொண்டுள்ளனர்.

இதேவேளை மற்றய பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன என குறிப்பிட்ட அச்சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்த்தன, இதுபற்றித் தெரிவித்தும் எந்த நடமிடிக்கையை எடுக்கப்படவில்லை எனவும் கூறினார்.

எனவே பண்டிகைக் காலத்தில் பேக்கரி உற்பத்தி பொருள்களின் விலை அதிகரிக்கும் என அச்சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்த்தன குறிப்பிட்டார்.

## தேசிய அடையாள அட்டை வழங்கும் ஒருநாள் நிகழ்வை ஆரம்பிக்க முடிவு!

கொரோனா அச்சம் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த தேசிய அடையாள அட்டையை ஒரு நாள் சேவையின் கீழ் பெற்றுக் கொள்ளும் முறையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த சேவை கொரோனா தொற்று பரவல் காரணமாக மக்கள் ஒன்று கூடுவதைத் தவிர்க்கும் வகையில், கடந்த காலங்களில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

மேலும், தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்காகப் பத்தரமுல்லை தலைமைக் காரியாலயத்துக்கு அல்லது தென்மாகாண காரியாலயத்துக்கு வர இருப்பார்களாயின் அதற்கான திகதி மற்றும் இலக்கமொன்றையும் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக குறித்த பிரதேச செயலாளர் காரியாலயத்தின் தேசிய அடையாள அட்டை பிரிவிற்குச் சென்று அல்லது 0115 226 100/ 0115 226 100 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகத் தொடர்புகொண்டு இந்த சேவையை பெற்றுக்கொள்வதற்கான விளக்கத்தை பெற்றுக்கொள்ள முடியும். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைக்குத்தான் கச்சதீவு சொந்தம் மாற்றுக் கருத்துகளுக்கே இடமில்லை!



## விமல் ஆணித்தரம்

கச்சதீவு இலங்கைக்கே சொந்தமானது. ஆகையால் அதனை இந்தியாவுக்கு ஒருபோதும் தாரைவார்க்க முடியாதென அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கச்சதீவை இலங்கையிடம் இருந்து மீளப்பெற்றுக் கொள்வது தொடர்பாக ஆராய்ந்து வருவதாக, இந்திய மத்திய கப்பல் மற்றும் தரைவழிப் போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் வி.கே.சிங் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் அந்த விடயம் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும்போதே விமல் வீரவன்ஸ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கச்சதீவு இலங்கைக்கு முழுமையாக வழங்கப்பட்டுள்ளதென இந்திய மத்திய அரசு ஒப்பந்தமொன்றில் தெரிவித்துள்ளது.

ஆனால் இந்திய அரசியல்வாதிகள், கச்சதீவை தொடர்ந்து உரிமை கோருகின்றனர். இதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

மேலும் குறித்த ஒப்பந்தத்தில், இருநாடுகளைச் சேர்ந்த மக்களும் வருடா வருடம் நடைபெறும் கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழாவில் கலந்துகொள்ளுவார்கள் என கூறப்பட்டுள்ளது.

இதற்காக கச்சதீவை இந்தியாவுக்கு வழங்க முடியாது. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி செலுத்தியவர்களுக்கு சினோபார்ம் தடுப்பூசியை செலுத்துவதற்கு முயற்சி!



## சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 24

அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியை செலுத்தியவர்களுக்கு இரண்டாவது கட்டமாக சினோபார்ம் தடுப்பூசியையும் செலுத்துவதற்காக அரசாங்கத்தால் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது சஜித் பிரேமதாஸ மேலும் கூறியுள்ளவை வருமாறு –

சினோஃபார்ம் தடுப்பூசியை தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம் அங்கீகரிக்கவில்லை. ஆனாலும் உள்ளூர் மக்கள் மீது அதைப் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு பதிவு செய்யப்படாத தடுப்பூசியை பயன்படுத்த முயற்சிக்கின்றனர். – என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால், அரசாங்கம் தனது மக்களுக்கு சிறந்ததைச் செய்யும் எனவும் பொதுமக்களுக்கு தடுப்பூசி போடப்படுவதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## கண்டி மற்றும் கொழும்பில் காற்று மாசுபாடு அதிகரிப்பு

கண்டி மற்றும் கொழும்பில் காற்று மாசுபாட்டின் அளவு அதிகரித்துள்ளது என சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரைத்த காற்றின் தர அளவை விட இது அதிகளவில் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

## மன்னாரில் வீடு தீக்கிரை: பொருள்கள் எரிந்து நாசம்!



மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள எமில் நகர் தோமையார் பகுதியில் உள்ள வீடு ஒன்று கடந்த திங்கட்கிழமை மதியம் எரிந்து பாரிய சேதத்திற்கு உள்ளாகியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை மதியம் குறித்த பகுதியில் 2 மணி அளவில் குறித்த வீட்டில் திடீர் என தீ பரவல் ஏற்பட்டு எரிந்த நிலையில் அயல் வீட்டில் உள்ளவர்கள் அதன் உரிமையாளருக்கு தகவல் வழங்கிய நிலையில் உரிமையாளர் அவ்விடத்திற்கு வந்து தீயை அணைக்க நடவடிக்கைகள் மேற்கொண்டனர்.

அயலவர்கள் மற்றும் கடற்படை இராணுவம் மன்னார் நகர சபை ஆகியோரின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.

எனினும் வீட்டுக்கு பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன. குறித்த வீட்டில் வாடகைக்கு வசிப்பவர்கள் அயல் கிராமத்திற்கு இறப்பு வீடு ஒன்றிற்கு சென்றுள்ள நிலையில் குறித்த தீ பரவல் ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இதனையடுத்து அவர்களுக்கும் தகவல் வழங்கப்பட்டு அவர்களும் அவ்விடத்திற்கு சென்று மீதமான பொருள்களை மீட்டுள்ளனர்.

வீட்டில் வசிப்போர் வாகனம் ஒன்று வைத்துள்ள நிலையில் அந்த வாகனதுக்கான டயர் மற்றும் காற்று அடிக்கும் இயந்திரம் உள்ளிட்ட ஏனைய பொருள்களும் வீட்டின் ஓர் அறையில் இருந்த நிலையில் தீ பரவல் காரணமாக முன் பகுதி மற்றும் கூரை பகுதி பாரிய சேதங்கள் ஏற்பட்டு தீக்கிரையாகி உள்ளன.

குறித்த சம்பவம் எவ்வாறு ஏற்பட்டுள்ளது என்று அறிய முடியாத நிலையில் மன்னார் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மன்னார் நகரப் பகுதியில் தீயணைப்பு படை பிரிவு இல்லாமை தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள போதும் இதுவரை குறித்த படைப்பிரிவும், தீயணைப்பு வாகனமும் மன்னார் மாவட்டத்திற்கு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## அமர்வுகள் நடைபெறும்போது சுற்றித் திரிந்த உறுப்பினர்கள்!

## கண்டித்தார் சபாநாயகர்

நாடாளுமன்ற அமர்வுகள் இடம்பெறும்போது உறுப்பினர்கள் சுற்றித் திரிவதை நிறுத்தி தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் அமருமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 10 மணிக்கு ஆரம்பமாகியபோது, சில உறுப்பினர்கள் சுற்றி நடப்பதும்



மற்றவர்களுடன் கலந்துரையாடுவதுமாக இருந்தனர்.

இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்ற அதிகாரிகளால் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிற்கு அறிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து அமர்வுகள் நடைபெறும்போது தனித்தனியே கலந்துரையாடலை நடத்த வேண்டாம் என்றும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் அமருமாறும் சபாநாயகர், நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டுக்கொண்டார்.

## குருந்தூர்மலையைச் சுற்றியுள்ள 400 ஏக்கர் பௌத்த மயமாகும்!



முல்லைத்தீவு – தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையைச் சுற்றியுள்ள மேலும் 400 ஏக்கர் காணியை, பௌத்த பூமியாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

இந்த விடயம் தொடர்பாக கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளரிற்கு, தொல்பொருள் திணைக்களம் எழுத்துமூலமாக அறிவித்துள்ளது.

குருந்தூர் மலையை சுற்றியுள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள் அமைந்துள்ள பகுதிகளை தம்மிடம் ஒப்படைக்குமாறு குறித்த எழுத்துமூல அறிவிப்பில் கோரப்பட்டுள்ளது.

குறித்த 400 ஏக்கர் காணியில், சுமார் 150 ஏக்கர் காணி, தண்ணி முறிப்பு கிராமத்திற்கு உரிய தமிழ் மக்களுடையது என்பதுடன், மிகுதி காணிகள் நாகஞ்சோலை வனப்பகுதியில் உள்ளடங்குகின்றன எனக் கூறப்படுகிறது.

இந்த காணியை தொல்பொருள் திணைக்களத்திற்கு ஒப்படைக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் திணைக்களத்திலிருந்தும், கரைத்துறைப்பற்று பிரதேச செயலக அதிகாரிகளிற்கு தொடர் அழுத்தம் கொடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் முதலாம் திகதி முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் இந்த கூட்டத்தில், 400 ஏக்கர் காணியை தொல்பொருள் திணைக்களம் கோரிய விடயம் குறித்து ஆராயப்படவுள்ளது.

அதன் நிகழ்ச்சி நிரலில் இந்த விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜெனிவாவிலும் இலங்கையிலும் இரட்டை வேடம் போடும் அரசு!

## வெட்கம் என்கிறார் மனுஷ நாணயக்கார



ஜெனிவாவில் முஸ்லிம் நாடுகளின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக ஒரு கருத்தைக் கூறும் அரசாங்கம், உள்நாட்டில் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக இனவாதத்தை தூண்டும் வகையில் வேறு கருத்துக்களை கூறுகின்றது. அரசாங்கத்தின் இதுபோன்ற இரட்டை கொள்கைகள் வெட்கப்பட வேண்டியவை என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

வன அழிப்பு எந்தவொரு பிரதேசத்திலும் இடம்பெறவில்லை என்று ஜனாதிபதி கூறுகின்ற போதிலும், தடுக்க முடியாதளவிற்கு பாரிய வன அழிப்புக்கள் இடம்பெறுகின்றன எனப் பாதுகாப்பு செயலாளர் கூறுகின்றார். இவை தொடர்பில் உண்மைகளை வெளிப்படுத்துவது ஊடகங்களின் கடமையாகும். அவற்றின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் அச்சுறுத்தல் விடுப்பது பாரிய தவறாகும்.

ஜெனிவாவில் முஸ்லிம் நாடுகளின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. கொவிட் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்று பிடிவாதமாகக் காணப்பட்ட அரசாங்கம் ஜெனிவா சிக்கலை தீர்த்துக் கொள்வதற்காக அதன் தீர்மானத்தை மாற்றிக் கொண்டுள்ளது.

இதே போன்று மாகாணசபை சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளாமல் தேர்தலை நடத்த முடியாது என்பதில் உறுதியாகக் காணப்பட்ட அரசாங்கம் இந்தியாவின் அழுத்தம் காரணமாக தேர்தலை நடத்துவதற்கு அவசரப்படுகிறது. புர்காவை தடை செய்ய தீர்மானித்துள்ளதாக அமைச்சர் சரத் வீரசேகர அறிவித்தார். எனினும் ஜெனிவா நெருக்கடியை கருத்தில் கொண்டு அவ்வாறானதொரு தீர்மானம் எடுக்கப்படவில்லை என்று பின்னர் அறிவிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் இதுபோன்ற இரட்டை கொள்கைகள் வெட்கப்பட வேண்டியவை. ஜெனிவாவில் முஸ்லிம் நாடுகளின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக ஒரு கருதத்தைக் கூறும் அரசாங்கம், உள்நாட்டில் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக இனவாத கருத்துக்களையும் கூறுகின்றது. இவ்வாறான செய்பாடுகளை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்று 14 மாதங்களுக்குள் 'உலகில் துக்கத்துடன் வாழும் நாடுகள்' பட்டியலில் இலங்கை 20 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. ஜனாதிபதியால் உலகில் துக்கத்துடன் வாழும் நாடுகள் பட்டியலில் இலங்கையை 20 ஆவது இடத்திற்கு கொண்டு வர முடிந்துள்ளது.

இவ்வாறான நிலையில் இலங்கை நாணயத்தின் பெறுமதி பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. நாணயத்தின் பெறுமதியுடன் ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களும் வீழ்ச்சியடைந்துள்ளன. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வன அழிப்பு தொடர்பில் தகவல்களை வெளிப்படுத்துபவர்களுக்கும், இந்தியாவிற்கும், சீனாவிற்கும், அமெரிக்காவிற்கும், ஊடகங்களுக்கும் அஞ்சுபவராகவுள்ளார்.

கடந்த கால வரலாற்றில் ஊடகங்களுக்கு சிறந்த பாடம் புகட்டியுள்ளதாகவும், எதிர்காலத்திலும் அதனை செய்ய முடியும் என்றும் அச்சுறுத்தும் அளவிற்கு ஜனாதிபதி ஊடகங்களைக் கண்டு அஞ்சியுள்ளார். ஊடகங்கள் சுதந்திரமாக செயற்பட வேண்டியவையாகும். எனினும் அவற்றின் சுதந்திரத்தில் தலையிட்டு விரைவில் அதிகாரத்தை இழப்பதற்கான பாதையிலேயே அரசாங்கம் தற்போது பயணித்துக் கொண்டிருக்கிறது. – என்றார்.

# 'ஸ்பூட்னிக் வி' தடுப்பூசி டோஸ்கள் ஒன்று 9.95 அமெரிக்க டொலர்கள்

ரஷ்யா தனது 'ஸ்பூட்னிக் வி' கொவிட்-19 எதிர்ப்பு தடுப்பூசியை இலங்கைக்கு ஒரு டோஸுக்கு 9.95 அமெரிக்க டொலருக்கு வழங்க ஒப்புக் கொண்டுள்ளது.

மேலும் 6.5 மில்லியன் தடுப்பூசிகளை ரஷ்யாவிடமிருந்து வாங்குவதற்கான உத்தரவு விரைவில் வெளியிடப்படும் என்று நம்பகத்தகுந்த ஆதாரங்களை மேற்கொள்ளிட்டு ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட ஒரு சிறப்பு தடுப்பூசி விலை பேச்சுக் குழு, ரஷ்யாவின் கமலேயா ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் இலங்கையுடன் பேச்சுகளை முடித்துவிட்டது.

தடுப்பூசியை ஒரு டோஸுக்கு 95 9.95 ரூபாவுக்கு வாங்க ஒப்புக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நபருக்கும் அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசிக்கு ஒத்த இரண்டு ஸ்புட்னிக் வி தடுப்பூசி டோஸ்கள் தேவைப்படுகின்றன.

# நாணய இடம்மாற்று ஒப்பந்தம் சீனா – இலங்கை கைச்சாத்து!

சீனா – இலங்கை ஆகிய இருநாடுகளும் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் நாணய இடம்மாற்று ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கி (சி.பி.எஸ்.எல்) மற்றும் பீப்பிள்ஸ் பாங்க் ஆப் சீனா (பி.பி.ஓ.சி) ஆகியற்றுக்கு இடையே இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

மேலும் இரு நாடுகளின் பொருளாதார வளர்ச்சி, வர்த்தகம் மற்றும் நேரடி முதலீட்டை ஊக்குவிக்கும் நோக்குடன் குறித்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கையில் அதிகளவு சீனப் பொருள்களே இறக்குமதி செய்யப்படுகின்றன.

அந்தவகையில் கடந்த 2020 ஆம் ஆண்டில், சீன இறக்குமதி, 3.6 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

குறித்த ஒப்பந்தத்தில் இரு நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்களும் கையொப்பமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசாங்கத்திற்கு எதிராக வாக்கெடுப்பு நடத்த எதிர்க்கட்சி முயற்சி - பிரசன்ன

எதிர்க்கட்சி, தனது தந்திரோபாயத்தின் ஊடாக அரசாங்கத்திற்கு எதிராக வாக்கெடுப்பு நடத்த முயற்சிக்கின்றது என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ரெஜி ரணதுங்க நினைவு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நிகழ்வில் பிரசன்ன ரணதுங்க மேலும் கூறியுள்ளதாவது, 'கோட்டபாய ராஜபக்ஷ தலைமையிலான எமது அரசாங்கம் தேர்தல் சார்ந்த அரசாங்கம் அல்ல. நாங்கள் கொள்கை நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்து செல்கின்றோம்.



இதேவேளை காடழிப்பு என்பது இன்று சமூக ஊடகங்களில் ஒரு முக்கிய தலைப்பாகிவிட்டது. நாங்கள் காடுகளை அழிக்க ஆட்சிக்கு வரவில்லை.

வன வளங்களை பாதுகாக்க நாம் எப்போதும் உழைக்கிறோம். ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட பேரழிவுக்கு அரசாங்கத்தை குற்றம் சாட்டி, நாட்டின் வாக்கெடுப்பை மாற்ற எதிர்க்கட்சி முயற்சிக்கிறது. அவர்களின் தந்திரோபாயம் அரசாங்கத்துக்கு எதிராக வாக்கெடுப்பை நடத்துவதாகும்.

வெளிநாடுகளில் காடழிப்பு புகைப்படங்களைப் பயன்படுத்தி, நாட்டில் காடழிப்பு நடைபெறுகிறது என்பதை சில சமூக ஊடகங்கள் காட்ட முயற்சிக்கின்றன. இவற்றால் ஏமாற வேண்டாம் என்று சொல்கிறேன்.

இந்த நாட்டிற்கு தீங்கு விளைவிக்கும் வகையில் அரசாங்கம் எதனையும் செய்யாது. - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தனிமைப்படுத்தல் விதி மீறிய 3 ஆயிரத்து 386 பேர் கைது!

## 3 ஆயிரத்து 350 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

தனிமைப்படுத்தல் விதிகள் தொடர்பாக கண்காணிப்பு பொலிஸாரால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதற்கமைய நேற்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதியிலிருந்து இதுவரையில் தனிமைப்படுத்தல் விதிகளை மீறியமை தொடர்பில் 3 ஆயிரத்து 386 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 3 ஆயிரத்து 350 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 3 வாரங்களில் தமிழ் – சிங்கள புத்தாண்டு கொண்டாட்டங்கள் ஆரம்பமாகவுள்ளன.

இதன் காரணமாக பல்வேறு தேவைகளின் நிமித்தம் பொது மக்கள் வெளியிடங்களுக்குச் செல்லக்கூடும்.

இவ்வாறு வெளியிடங்களுக்குச் செல்லும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் முகக்கவசம் அணிவதோடு, சமூக இடைவெளியைப் பேணுமாறு அறிவுறுத்துகின்றோம்.

நாம் ஒவ்வொருவரும் கொவிட் தொற்றுக்கு உள்ளாகாதவர்களாக இருந்தால் மாத்திரமே தமிழ் – சிங்கள புத்தாண்டு பிறப்பை மகிழ்ச்சியாகக் கொண்டாட முடியும்.

எனவே, சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை முறையாக பின்பற்றுமாறு வலியுறுத்துகின்றோம்.– என்றார்.

# இலங்கைக்கு எதிரான ஐ.நா. ஆணையரின் மதிப்பீட்டை ஆதரிப்பதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவிப்பு!

இலங்கையில் பொறுப்புக்கூறல் செயன்முறைகளுக்காக மேலும் கால அவகாசம் வழங்குவது சாத்தியமான விடயமல்ல என்ற ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் மதிப்பீட்டை ஆதரிப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான பிரேரணை மீதான வாக்கெடுப்பு நேற்று (செவ்வாய்க் கிழமை) இடம்பெற்றது.

இந்த நிலையில், இந்த விடயம் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபையால் அதன் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவிடப்பட்டுள்ளது.

குறித்த பதிவில், இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரங்களைத் தொடர்ந்து கண்காணிப்பதற்கும் அங்கு இடம்பெற்றதாகக் கூறப்படும் பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டுவதற்கும் ஏதுவான வகையில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் தற்போது முன்வைக்கப்பட்டிருக்கும் பிரேரணைக்கு உறுப்புநாடுகள் ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

அத்தோடு பொறுப்புக்கூறல் செயன்முறைகளுக்காக மேலும் காலம் வழங்குவதென்பது சாத்தியமான அல்லது பொறுப்புவாய்ந்த அணுகுமுறையாக இருக்காது என்ற ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் மதிப்பீட்டை முழுமையாக ஆதரிக்கின்றோம்' என பதிவிடப்பட்டுள்ளது.

# புதையல் தோண்டிய குற்றம் புத்தளத்தில் ஏழு பேர் கைது!

புத்தளம், ஆனமடுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொனிகல பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டுக்காக ஏழு பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதான சந்தேக நபர்கள் ஆனமடுவ நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, மேலதிக விசாரணைக்காக தடுப்புக் காவலில் உள்ளனர்.

சுற்றுச்சூழல் அழிவு, காடழிப்பு மற்றும் புதையல் வேட்டை குறித்து நடவடிக்கை மேற்கொள்ள இலங்கை காவல்துறை புதிய விசாரணைப் பிரிவை நிறுவி வருவதாகவும், இது தொடர்பான அவசர அழைப்பை மேற்கொள்ள நான்கு இலக்கம் கொண்ட தொலைபேசி இலக்கங்களும் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

# கந்தர்மடம் இந்து சமயப் பேரவை வளாக நடராஜப் பெருமானுக்கு இன்று கும்பாபிஷேகம்



**கந்தர்மடம் இந்து சமயப் பேரவை வளாக நடராஜப் பெருமானுக்கு இன்று கும்பாபிஷேகம். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

கே.எஸ்.சிவஞானாராஜா

கந்தபுராணக் கலாசாரமும், கலை இலக்கிய கட்டட மாடங்களும், வந்தோரை வரவேற்கும் விந்தைமிகு சங்கடம் படலைகளும், இனித்திடும் நாற்சார் வீடுகளும் மலிந்த அற்புதமான திருப்பதியே கந்தர்மடம் ஆகும்.

கந்தபுராண வீதி என்றே ஒரு பாதை கந்தர் மடத்தை அலங்கரித்து வாழ்ந்து வந்திருக்கிற செய்தியைப் பார்க்கும்போது அதன் மகிமைதான் என்னே? நல்லூருக்கும் கந்தர் மடம் ஒரு வசீகரிப்பைக் கொடுக்கிறது.

செல்லப்பா சுவாமிகளும், யோகர் சுவாமிகளும் நல்லூரிலிருந்து கந்தர்மடம் வரை கூடிக் குலாவி



ஆடிப்பாடி நல்லூரானை மகிழ்வித்த அதிசய வரம் மிக்க இடமாகக் கந்தர்மடம் விளங்குகிறது.

பலாலி வீதியானது கந்தர்மடத்திற்கு நீண்ட ஆயுளையும், வனப்பினையும், ஆன்மீகக் கனதியையும் வழங்கி யாவரையும் வரவேற்கிறது.

பலாலி வீதியிலே, தம்ரோ ஸ்தாபனத்திற்கு முன்பாக, அரவணைத்து அருள்பாலிக்கின்ற ஒரு திருப்பதியே, பெருந்தகை வாழும் ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத தில்லை, ஸ்ரீமத் நடராஜாப் பெருமான் சந்நிதியாகும்.

தில்லையில் சிதம்பரம் போலவே இலங்கையில் இந்து சமயப் பேரவை வளாகத்தில் அமைந்த தில்லை நடராஜப் பெருமான், பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகையாய் காட்சி தருகின்றான்

**"ஈசனடி போற்றி எந்தையடி போற்றி**
**தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி"**

**மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்**
**கண்ணில் நல்லஃதுறுங் கழுமல வளநகர்ப்**
**பெண்ணில் நல்லா ளொடும் பெருந்தகை இருந்ததே**

வாலாயம் மிக்க வடிவமைப்பினைக் கொண்ட தாய் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத நடராஜப் பெருமான் பெரும் அற்புதங்கையும் அதிசயங்களையும் சோதனைகளையும் சுபீட்சங்களையும் பாடங்களையும் அருளியவராய் ஈற்றிலே, கந்தர்மடத்தில் பேறாகும்படி இந்து சமயப் பேரவை வளாகத்திலே வரந்தரத் தம்மை எமக்குப் பேறாக்குகின்றார்.

**ஆராத இன்பம் அருளும் மலையாக**
**அஞ்ஞானம் தன்னை அகல்விளக்கும் நல்லறிவாக,**
**தாயிற் சிறந்த தயாவான தத்துவனாக,**
**ஓராதார் உள்ளத்துள் ஒளிக்கும் ஒளியானாக**

கந்தர்மட இந்து சமயப் பேரவையில் விரும்பி உறைபவராய் காட்சிக்கினியராய் மாட்சி பெறுகின்றார்.

எம்பெருமான் எவரிடம் எங்கு எப்படி எவ்விடம் எவ்விதம் இருக்க விரும்புகிறாரோ அவ்வாறு அங்கு அப்படியே உறைகின்ற பாக்கியமுமு வாக்கியமும் பாவனையும் பெறுகிறார். சில சமய சமூக விரோதிகள், குறுக்கிட்டபோதும் சிவன் கந்தர்மடத்தையே தான் உறைவதற்கு ஏற்ற இடமாகப் பேறு கொண்டார்.

**"முத்திநெறியறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்**
**பத்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்,**
**சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட,**
**அத்தனெனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே."**

தவத்திரு யோகர் சுவாமி ஆற அமர இருந்து தியானம் செய்த இடமாக இந்து சமயப் பேரவை அமைந்த சூழலும் சேத்திரமும் கிட்டியமை பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. அல்லாமலும் பல சிவானுபூதிமான்கள் இந்து சமயப் பேரவைக்குப் பேரும் புகழும், பேறும் அளித்துள்ளார்கள். 1992 ஆம் ஆண்டு தொடக்கம் ஆத்ம ஜோதி முத்தையா, முன்னாள் உதவி அரசாங்க அதிபர் மகாலிங்கம், அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயா, பேராசிரியர் சிற்றம்பலம், நல்லூர் ஆதீன முதல்வர், ஈசானஸ்ரீ சிவ சக்திகீரிவன், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன், போராசிரியர் சிவசாமி, பேராசிரியர் கோபால கிருஷ்ண ஐயா, பண்டிதர் சி.பஞ்சாட்சர சர்மா, பெரியார் யோகேந்திரா துரைசாமி, மில்க்வைற் அதிபர் கனகராசா, பெரியார் க.சி.குலரத்தினம், சிறப்பாக வணக்கத்துக்குரிய மாவை ஆதீன கர்த்தா ஷண்முக நாதக்குருக்குள், கீரிமலை நகுலேஸ்வர ஆதீன கர்த்தா, வணக்கத்துக்குரிய நகுலேஸ்வரக் குருக்கள், நல்லூர் தேவஸ்தான பெருந்தகைகள், முன்னாள் மேயர் சட்டத்தரணி நாகராசா, மேலும் இந்தியாவில் இருந்து வருகை தந்த ஸ்ரீமான் பரமேஸ்வர தீட்சதர், உமாநாத தீட்சதர், வெங்கடேஸ்வர தீட்சகர், மாணிக்கவாசக சுவாமிகளின் மரபில் வந்த குருக்கள்மார், ஆதீன பீடங்கள், ஸ்ரீஸ்ரீரவிசங்கர், திருக்கணித பஞ்சாங்க சிதம்பரநாதக்குருக்கள், பொன்னாலை வரதராஜப் பெருமாள் பிரதமகுருக்கள், திருவாவடுதுறை ஆதீனம், சிதம்பரம் தெட்சணாமூர்த்தி தீட்சதர், பரமேஸ்வர தீட்சதர் ஆகியோர் பேரவைக்கும் பெருமானுக்கும் தெய்வ அனுகூலமும், தெய்வ சம்பாத்தியமும் உண்டாகும் படி தம்மை அர்ப்பணித்திருக்கின்றார்கள். பேறாக்கியிருக்கிறார்கள்.

மேலுமொரு சிறப்பு யாதெனில் குருக்கள்மாரும், தீட்சதர்களும், ஈசான ஸ்ரீ சிவசக்திகிரீவன் அவர்களும் சமகாலத்தில் பூஜை ஆற்றுகின்ற ஒரேயொரு ஆலயம், கந்தர்மடம் ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத தில்லை ஸ்ரீமத் நடராஜப் பெருமான் ஆலயமாகும்.

"மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது" என்பது போல, சிறிய ஆலயம் ஆனால் பெரிய வாலாயம் மிக்கது.

இரண்டு வருடங்களுக்கு முன்னதாக ஒரு சமய முகவரும் தரகரும் ஆன ஒருவர் இந்த ஆலய முன்றிலில் நின்று தாறுமாறாக ஏளனமாகப் பேசியிருந்தார். அன்றிலிருந்து இன்று வரை அவரோடு சேர்ந்து வீடும் நாடும் குழம்பியுள்ளது. அகாலங்கள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. இந்த நாடு ஒரு சிவ பூமியாகப் போற்றப்படுகிறது. அத்தகு சிவ பூமியிலே, சிவன் சொத்துக்கள், சிவநாமங்கள் சீவனுக்காக் காமல், சிவமாக்கப்பட வேண்டும். கந்தர்மடம் சீவனைச் சிவமாக்குகின்றது. சிவதீட்சை செய்கிறது. முப்போதும் திருமேனி தீண்டி சிவப் பொலிவு மணங் கமழ சிவபெருமானை வாயார வாழ்த்துகிறது.

சிவஸ்ரீ ஈசான சிவ சக்திகிரீவன் அவர்கள் தினந்தோறும் எம் பெருமானுக்கு ஆன்மார்த்தமாகப்



பூஜை மற்றும் பாராயணம் ஆற்றுவதனால், கேட்ட வரம் சித்திக்கின்றது. வேண்டத்தக்கதை சிவபெருமான் அவரவர் பக்குவத்திற்கு ஏற்றவாறு கொடுக்கின்றார்.

இத்தகு சிறப்பு வாய்ந்த கந்தர்மடம் இந்து சமயப் பேரவை வளாகத்தில் எழுந்தருளியிருக்கும் நடராஜப் பெருமானுக்கு சம்புராக்ஷண மஹா கும்பா





பிஷேகம் (திருக்குட நன்னீராட்டு விழா) இன்று 24.03.2021 புதன்கிழமை காலை 6.38 தொடக்கம் 7.20 மணி வரையான சுபமுகூர்த்தத்தில் நிகழத் திருவருள் பாலித்திருக்கும் நிலையில்,

ஊரும் பேரும் வீடும் நாடும் காடும் கரம்பையும் மேடும் பள்ளமும் சுபீட்சம் பெற பக்த கோடிகள் வருகை தந்து இஷ்ட சித்திகளைப் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

2007 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது கும்பாபிஷேகத்திற்குப் பின்னர் இம்முறை இது நடைபெறுகின்றது.

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேஸ்தான பிரதம குருவான, வணக்கத்துக்குரிய பிரதிஷ்மா சிரேரன்மணி, சகலாகம பண்டிதர் ச.ச. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்கள் தலைமையில் மிகவும் பக்திபூர்வமாக கும்பாபிகேக் கிரியைகள் நடைபெறுகின்றன.

கொரோனா கட்டுப்பாட்டு நடைமுறைகளோடு மேற்படி கும்பாபிகேம் சிறப்பாக நடைபெற சகல அடியார்களும் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்க்கப் பட்டுள்ளீர்கள்.



“பல அரசியல்வாதிகள் வாக்குறுதி வழங்கினார்கள். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் இடம் பெறவில்லை. இங்கு யானைத் தாக்குதல் இடம்பெறுவதற்கு குடிதண்ணீர்ப் பிரச்சினையும் ஒரு காரணம்.”

# வளமிருந்தும் வழியின்றி தவிக்கும் வாகனேரி மக்கள்

வாழையூர் ந.குகதர்சன்

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வாகனேரி, முள்ளிவட்டவான், பொத்தானை, குளத்துமடு கிராம மக்கள் குடிதண்ணீர் மற்றும் காட்டு யானைப் பிரச்சனை காரணமாக தாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கின்றனர்.

தற்போது கிராம மக்களுக்கு குடிப்பதற்கு மற்றும் குளிப்பதற்கு நீர் இன்மையால் அவர்கள் வாகனேரி குளத்தை நாடி வருகின்றனர். ஆனால் குளத்திலும் நீர் குறைவாகவே காணப்படுகிறது. இந்த நீரே வேளாண்மைச் செய்கைக்கும் முக்கியத்துவம் பெறுகின்றது.

இதனால் தாங்கள் குளத்தில் அருகில் பூவல் மூலம் தண்ணீரை வடித்து எடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர் என மக்கள் தெரிவிக்கின்றனர். அத்தோடு பல சமயங்களில் குளத்தில் நீர் எடுக்கும் போது யானைகள் திடீரென வருகின்றமையால் பயப் பீதியில் தாங்கள் தண்ணீர் எடுக்கமால் ஓடித் தப்ப வேண்டியிருக்கின்றது என அப்பகுதி மக்கள் தெரி



விக்கின்றனர்.

“தற்போது எங்களுக்கு தண்ணீர் பிரச்சனையோடு யானைப் பிரச்சனை பாரிய பிரச்சினையாக உள்ளது. எங்களது நிலைமைகள் தொடர்பாக எவரும் கவனத்தில் கொள்வதில்லை. யானைகளின் வருகையால் எங்களது உறவுகளின் சிலரை ஒவ்வொரு வருடமும் இழந்து வருகின்றோம்.

“இவ்விடயமாக பல தடவை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளிடம் தெரிவித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எங்களை வந்து பார்ப்பதும் இல்லை. நாங்கள் எங்களை உயிரை கையில் பிடித்துக் கொண்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கிறோம்” - என அந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வாகனேரி குளத்தினை நம்பி 2,500 குடும்பங்களுக்கு மேல் வாழ்கின்றன. 8,500 ஏக்கர் வேளாண்மை தமிழ் மற்றும் முஸ்லிம் விவசாயிகளால் செய்கை பண்ணப்படுகின்றது. அவர்களின் நிலைமையும் கவலைக்கிடமாகவே காணப்படுகின்றது.

காட்டு யானைகள் மட்டுமன்றி ஆயிரக்கணக்கான கால் நடைகள், உயிரினங்களும் இக்குளத்துக்கு பகலிலும், இரவிலும் நீர் பருக வருகின்றன.

இக்குளம் முறையாகப் பேணப்பட்டால் குளத்தை நம்பி வாழும் விவசாயிகள் வரட்சியால் ஒரு போதும் பாதிக்கப்பட வாய்ப்பு இல்லை. ஆனால் இக்குளத்தை புனரமைப்பு செய்வதாக தெரிவித்தார்கள். இன்னும் அதுவும் இடம்பெறவில்லை.

வாகனேரி குளத்தினை புனரமைப்பு செய்வதாக



அரசியல்வாதிகளும் காலத்திற்கு காலம் கூறுகின்றனர். ஆனால் இன்னும் குளம் புனரமைப்பு செய்யப்படவில்லை.

’வாகனேரி குளத்தினை நம்பியே நாங்கள் எங்களது ஜீவனோபாய தொழிலை மேற்கொண்டு வருகின்றோம். வாகனேரி குளம் இல்லையேல் எங்களது வாழ்க்கையே இல்லை’ என்ற நிலைமையில் இப்பகுதி மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

## மக்களின் கருத்துக்கள்

வாகனேரி குளத்தை நம்பி வாழும் எங்களுக்கு குளமும் புனரமைக்கப்படவில்லை, காட்டு யானைகளிடமிருந்து பாதுகாப்பும் இல்லை. உரிய பாதுகாப்பு வேலியும் இல்லை. இரண்டையும் நிறைவேற்றுங்கள்.

பல அரசியல்வாதிகள் வாக்குறுதி வழங்கினார்கள். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் இடம் பெறவில்லை. இங்கு யானைத் தாக்குதல் இடம் பெறுவதற்கு குடிதண்ணீர்ப் பிரச்சினையும் ஒரு காரணம்.

வாகனேரி கிராமத்தில் 600க்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவர்கள் வாகனேரி குளத்தில் இருந்தும், குளத்தை அண்மித்து பூவல் மூலமுமே நீரை பெறுகின்றனர்.



மாலை நேரங்களில் எங்களுக்கு தேவையான குடிதண்ணீரைப் பெறுவதற்கு குளத்திற்கு வரும் போது யானைகள் எங்களை தாக்கும் சம்பவம் இடம் பெற்று வருகின்றன. பலரை யானை தாக்கி உயிரிழந்தமை மற்றும் கை, கால் முறிந்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

எனவே உடனடியாக வனஜீவராசிகள் திணைக்களம் எமது மக்களை யானையின் பிடியில் இருந்து பாதுகாக்க பாதுகாப்பு வேலியினை அமைத்துத் தர வேண்டும்.

எங்களது ஜீவனோபாய தொழிலான மீன்பிடி தொழிலை செய்வதற்கு இரவு நேரத்தில் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. எங்களது தொழிலை மேற்கொள்ள முடியாமல் எங்களை யானைகள் துரத்தும் நிலைமை காணப்படுகின்றது.



அத்தோடு எங்களுடைய பிள்ளைகளின் பாடசாலை சீருடைகளை துவைப்பதற்கும், பிள்ளைகள் பாடசாலைகளுக்கு செல்வதற்குன் குளிப்பதற்கும் கூட இங்கு அதிகாலையில் வரும் யானைகளினால் தொல்லை உள்ளது.

இதனால் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கை பாதிப்படைகின்றது. குளத்தை நம்பி வாழும் எங்களுக்கு குளமும் புனரமைப்பு இல்லை, யானையில் இருந்து எங்களை பாதுகாக்க பாதுகாப்பு வேலியும் இல்லை.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அரசியல்வாதிகள் உடனடியாக எமது கிராமத்திற்கு வருகை தந்து எங்களது நிலைமையை பார்வையிட்டு உடனடியாக தண்ணீர் பிரச்சனை மற்றும் யானை பிரச்சினையை தீர்த்து தருமாறு வேண்டுகின்றோம் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

வாகனேரி கிராமத்தினை அண்டிய பகுதியிலுள்ள பொன்டுகள்சேனை, முள்ளிவட்டவான் கிராமத்திலும் மக்கள் யானை தொல்லையால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

பொது மக்களுக்கான மிக முக்கிய நீர் வளமாக வாகனேரி குளம் அமைந்த போதும் மக்கள் வரட்சிக் காலத்தில் தண்ணீருக்காக போராடும் நிலைமை இன்னும் மாறவில்லை. குளத்து நீரை சுத்திகரித்து அப்பிரதேச மக்களுக்கு நீர் வழங்கும் திட்டத்திற்கு முயற்சி செய்ய வேண்டும்.

## வளச்சுரண்டல்

எல்லைப்புற கிராம மக்களின் வளங்கள் பிற இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. அதனால் ஏற்படும் பாதிப்புக்களுக்கு அந்த பிரதேசத்தில் வாழும் ஏழை மக்களே முகம்கொடுக்க வேண்டியுள்ளது.

யானை வேலி அமைக்கப்படாமையினால் உயிரை கையில் பிடித்துக் கொண்டு உறங்கும் எல்லை கிராம மக்கள், வாழ்வாதார பயிர்களும், உடைமைகளும் யானைகளினால் பாதிக்கப்படுவதனால் ஏழ்மை நிலையிலிருந்து மீள முடியவில்லை.

## சமூகச் சீரழிவு

வடிசாராய உற்பத்தியும் சட்டவிரோத போதை பாவனையும் தொடர்கின்றன.

சட்ட - ஒழுங்கு விடயங்கள் சரியாக நடைமுறைப் படுத்தப்படாமையினால் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சமூக சீரழிவுகள் அதிகரிக்கின்றன.

# கொழும்பில் காடழிப்புக்கு எதிராக ஜே.வி.பியினர் செயற்கை சுவாசக் கருவிகளுடன் ஆர்ப்பாட்டம்!





கொழும்பு, மார்ச் 24

'காடழிப்பிற்கு எதிராக நாம் கொழும்பிற்கு' என்ற தொனிப்பொருளில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) கடந்த திங்கட்கிழமை கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. காடழிப்பைத் தடுக்குமாறு வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடந்த திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு கொழும்பு - டெக்னிகல் சந்தியில் ஆர்ப்பாட்டம் ஆரம்பமானது. பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கொழும்பு, கோட்டை ரயில் நிலையம் வரை பேரணியாக சென்றனர். ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க , நாடாளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய , பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பிமல் ரத்நாநாக்க, நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் சுனில் ஹந்துன்னெத்தி மற்றும் கட்சி முக்கியஸ்தர்கள் உள்ளடங்கலாக பலர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

காடழிப்பின் மூலம் எதிர்காலத்தில் சுவாசிப்பதற்கு ஒட்சிசன் இல்லாமல் போகும் நிலை ஏற்படும் என்பதை வலியுறுத்தும் வகையில், ஆதிவாசிகளை போன்றும், மேற்கத்தையோரைப் போலவும், உள்நாட்டவர்களைப் போலவும் ஆடை அணிந்திருந்தவர்கள் செயற்கை சுசாவ கருவிகளைப் பொறுத்தியவாறு பேரணிக்கு முன் நடந்து சென்றனர்.

அத்தோடு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உருவப்படம் பதித்த முக மூடியை அணிந்திருந்த சிலர் கைகளில் செடிகளின் படங்களை ஏந்திவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

'ஆட்சியாளர்களே சுற்றாடல் அழிப்பை உடனடியாக நிறுத்துங்கள்', 'ஆதிவாசிகளும் நீதிமன்றம் செல்கின்றனர்', 'காடழிப்பதை தடுப்பதற்கு எம்முடன் இணையுங்கள்', 'சட்டங்களை உருவாக்கி, காடுகளை அழிப்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்குகின்றனர்', 'சிங்கராஜ வன அழிப்பின் பாதிப்பு நாட்டுக்கன்றி வேறு யாருக்கு?' 'அரசாங்கத்தின் நலன் விரும்பிகளுக்கு முத்துராஜவெல' உள்ளிட்ட வாசனங்கள் எழுத்தப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு காடழிப்பிற்கு எதிரான கோஷங்களையும் எழுப்பி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# இயற்கைக்கு மாறான அரசாக எம்மைக் காண்பிக்க முயற்சி!

## அங்கஜன் இராமநாதன் வேதனை



இந்த அரசாங்கத்தை திட்டமிட்டு குறை கூற வேண்டும் என்பதற்காக இயற்கைக்கு மாறான அரசாங்கமாக காண்பிக்க முயல்கின்றனர் என யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும், நாடாளுமன்ற பிரதி குழுக்களின் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆறுகளை பாதுகாப்புஜும் தேசிய வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

யாழ் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நதிகளே இல்லாத ஒரு பிரதேசமாகக் காணப்படுகின்றது. ஆனால் வடக்கு மாகாணத்தில் ஏனைய மாவட்டங்களில் ஆறுகள் நதிகள் காணப்படுகின்றன. இவை இப்போது உள்ள அரசாங்கத்தால் பாதுகாக்கப்படுகின்றன. இந்த அரசாங்கத்தைத் திட்டமிட்டு குறை கூற வேண்டும் என்பதற்காக இயற்கைக்கு மாறான அரசாங்கமாகக் காண்பிக்க முயல்கின்றனர்.

ஆனால் இந்த அரசாங்கம் இவ்வாறு இயற்கை வழங்களைப் பாதுகாப்பதற்குப் பல்வேறு முயற்சிகளை எடுத்த வருகின்றது. அதன் ஓர் அங்கமாகவே இங்கு இன்று இந்த நிகழ்வு அமைந்துள்ளது. எமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் பொதுமக்களின் விவசாயம் செய்த மற்றும் செய்யக் கூடிய காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதியிடம் நான் கோரிக்கை விடுக்கின்றேன்.

இங்குள்ள மாவட்ட மக்கள் விவசயாயத்தை முன்னெடுத்த வருகின்றனர். ஏனைய பகுதிகளில் இவ்வாறு விவசாயம் செய்யப்பட்ட காணிகளை விடுவிப்பது போன்று இங்கும் காணிகளை விடுவிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என தான் கோரிக்கை விடுப்பதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

ஐ.நாவின் மின்சார கதிரையிலிருந்து காப்பாற்றியது.

இவ்வாறான விடயங்கள் சுமுகமான பேச்சுவார்த்தை மூலம் கையாளப்பட வேண்டியவையே தவிர, முரண்பாடுகள் மூலம் கையாளப்பட வேண்டியவையல்ல.

தொடர்பாடல்களை பேண வேண்டியது அத்தியாவசியமானதாகும். எதிர்க்கட்சியுடன் கூட தொடர்பாடல்களை முன்னெடுக்காத அரசாங்கம் எவ்வாறு சர்வதேசத்துடன் அதனைப் பேணும்? என்றார்.

# விமர்சனங்களை முன்வைப்போர் சூழலை காக்க முன்வரவேண்டும்!

## ஜனாதிபதி கோட்டா தெரிவிப்பு



தான் பாதுகாப்பு செயலாளராக இருந்தபோது, அப்போதைய அரசாங்கம் கொழும்பை சுத்தமான மற்றும் அழகான நகரமாக மாற்ற நடவடிக்கை எடுத்ததாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் பேசிய அவர் -

சமூக ஊடகங்களில் விமர்சிப்பவர்கள், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான தங்கள் பொறுப்பை வெறுமனே பேசாமல் அதனை நிறைவேற்ற வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

சுற்றுச்சூழல் மாசுபாடு தொடர்பாக இன்று அனைவரும் விவாதித்து வருகின்றனர் எனவும், அதற்காக பல்வேறு திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் அழிவு தொடர்பாகக் கருத்து தெரிவிக்காமல் அனைவரும் தங்கள் பொறுப்பை நிறைவேற்றினால் சுற்றுச்சூழலை எளிதாகப் பாதுகாக்க முடியும் என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

# ஆறுகளைக் காத்திடுவோம் வேலைத்திட்டம் கிளிநொச்சியில்!





சுற்றாடல் அதிகார சபையின் ஏற்பாட்டில் 'ஆறுகளைக் காத்திடுவோம்.' தேசிய வேலைத்திட்டம் கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சியிலும் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி 155 ஆம் கட்டை பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எச்.எம்.சார்ள்ஸ், யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், நாடாளுடன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான அங்கஜன் இராமநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏசுமந்திரன், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது இன்றைய நாளின் நினைவாக பகுதியில் மரக்கன்றுகளும் நாட்டி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

| பயிர்கள் | பயிர் இடைவெளி | ஏக்கருக்கு பயிர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| குடைமிளகாய் | 90cm x 60 cm | 7494 |
| கற்றாழை | 60cm*30cm | 22480 |
| குரக்கன், | 20cm*15cm | 134895 |
| பெரிய வெங்காயம் | 10cm*10cm | 404685 |
| கொய்யா | 5m*5m | 160 |
| புடலங்காய் | 1.5m*1.5m | 1798 |
| மிளகாய் | 60cm*45cm | 14988 |
| முட்டைக்கோஸ் கோவா | 50cm*40cm | 20234 |
| நெல் | 15cm * 15cm<br>10cm * 10cm | 179860<br>404685 |
| வத்தாளை | 60cm*30cm | 22480 |

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

# வடக்கு, கிழக்கு அதிபர், ஆசிரியர்களுக்கு மன அழுத்தம்!

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கவலை

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றுகின்ற பெருமளவான அதிபர்கள், ஆசிரியர்கள் மன அழுத்தங்களுக்கு உட்படுத்தப்படுகின்றமையோடு அதனால் தீராத நோய்கள் ஏற்பட்டு மரணங்களும் நிகழ்கின்றன.

- இவ்வாறு சுட்டிக்காட்டி கவலை வெளியிட்டுள்ளது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம். சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவை வருமாறு:-

01. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாடசாலைகளுக்கான அதிபர் நியமனம், ஆசிரிய நியமனம் என்பவற்றில் பல்வேறு குளறுபடிகள் நடைபெறுகின்றன.

பாடசாலைகளின் தரத்திற்கு ஏற்ப அதிபர்கள் நியமிக்கப்படுகின்றார்கள் இல்லை. வெற்றிடங்களை நிரப்புவதும் இல்லை. அதிபர் சேவை தரம் 1இல் உள்ளவர் தரம் III பாடசாலையிலும், அதிபர் சேவைத் தரம் 3இல் உள்ளவர் 1ஏபி பாடசாலையிலும் கடமையாற்றுகின்றார். பெருமளவான கஸ்ட, அதிகஸ்ட பிரதேச பாடசாலைகளில் அதிபர் சேவையில் உள்ளவர்கள் கடமையில் இல்லை. மாறாக சேவைக் கொடுப்பனவுகள் ஏது மின்றி ஆசிரியர்களே அதிபர் கடமையில் உள்ளனர்.

ஆசிரிய நியமனங்கள் எவையும் நியாயமாக நடைபெறுவதில்லை. ஒரு சில இடங்களில் தேவைக்கு அதிகமாக ஆசிரியர்கள் உள்ளனர். கஷ்ட, அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளில் அவசியமான பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை. வடக்கு மாகாணத்தில் அனைத்து வலயங்களிலும் ஆசிரியர்கள் மேலதிகம். மாறாக ஆசிரிய ஆளணிக்குப் பொருத்தமில்லாமலும் சீர்செய்யப்படாமலும் உள்ளனர்.

02. ஆசிரிய இடமாற்றங்கள் ஏனைய மாகாணங்களைவிட வடக்கு, கிழக்கில் அதிகாரத்தில் உள்ளவர்களின் விருப்பப்படியே நடைபெறுகின்றன. கிழக்கு மாகாணத்தில் வலயங்களுக்கு இடையிலான ஆசிரிய இடமாற்றம் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களின் பதவி மோகத்தால் பல ஆண்டுகள் நடைபெறவில்லை.

03. வடக்கு மாகாணத்தில் அரச சுற்றுநிருபத்துக்கு 2007/20) மாறாக மேன்முறையீடுகள் எதனையும் ஏற்காமல் தாம் சொல்லும் இடத்துக்குச் செல்ல வேண்டும் என்ற உத்தரவு. ஒரு பாடசாலையில் ஒரு பாடத்துக்கு ஒரே யொரு ஆசிரியர் இருந்தால் அவருக்கும் இடமாற்றம். அவர் இடமாற்றம் செய்யப்பட்ட இடத்தில் ஆசிரியர்கள் மேலதிகம். பின்னர் நேரசூசிகை இல்லாதவர்களின் வேதனம் நிறுத்துவதாக அச்சுறுத்தல். இதற்கு கணக்காய்வுத் திணைக்களம் சாட்டு.

04. ஏழு ஆண்டுகளுக்கு மேல் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு நேரசூசிகை வழங்கக்கூடாது என கல்விப்பணிப்பாளர் கட்டளை. அவர்கள் இன்னுமொரு பாடசாலைக்கு மேலதிக ஆளணியாக அதிரடி இடமாற்றம். கடிதம் வரும். மேன்முறையீடு செய்யாமல் கடமையேற்கவேண்டும் என்ற கட்டளை.

இவை போன்ற ஏராளமான விடயங்களால் அதிபர்களும், ஆசிரியர்களும் மன அழுத்தங்களுக்கு உட்பட்டு சேவையில் இருந்து இடைவிலகுவதும், முன்னரே ஓய்வுபெறுவதும், நோய்வாய்ப் படுவதும், மரணிப்பதும் வடக்கு, கிழக்கில் சாதாரணமாகிவிட்டது.

தற்போதைய நிலையில் ஏனைய மாகாணங்களை விட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பின்னிலையில் இருப்பதற்கு இதுவே மூல காரணம்.

ஆசிரிய தொழில் பிற தொழில்கள் போன்றதல்ல. மனமகிழ்ச்சியுடன் செய்ய வேண்டிய தொழில்.

அதிகாரங்களைப் பயன்படுத்தி கருமமாற்றுவது இந்தத் தொழிலுக்குப் பொருந்தாது - என்றுள்ளது.

# மாகாண சபை முறையை ஒழிக்குமாறு அமைச்சரவையிலும் வலியுறுத்துவேன்

## சரத் வீரசேகர சண்டித்தனம்

மாகாண சபை முறைமை ஒழிக்கப்படவேண்டும் என்ற எனது நிலைப்பாடு ஒருபோதும் மாறாது. அதற்காகத் தொடர்ந்தும் குரல் கொடுப்பேன். அமைச்சரவையிலும் கருத்துகளை முன்வைப்பேன்.

- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

மாகாண சபை முறைமைக்கு அமைச் சர் சரத் வீரசேகர கடும் எதிர்ப்பை வெளியிட்டுவருகின்றார். ஆனாலும், மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. இது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாண சபை முறைமையை ஒழிப் பேன் என நான் கூறவில்லை. அம்முறைமைக்கு எதிரானவன் நான். எனவே, குறித்த முறைமையை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமானால் அதற்கு முழு ஒத்துழைப்பையும் வழங்குவேன்.

மாகாண சபை முறைமை தொடர்பில் நாடாளுமன்றம்தான் முடிவெடுக்க வேண்டும். இந்த விவகாரம் தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடும் போது எனது கருத்துக்களை முன்வைப் பேன். மாகாண சபை முறைமை தொடர்பான எனது எதிர்ப்பு ஒருபோதும் மாறாது - என்றார்.

அதேவேளை, புர்கா தடை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர்,

அதற்கான அமைச்சரவைப் பத்திரத்தில் கையொப்பமிட்டுள்ளேன். முன்கூட்டியே ஒதுக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையிலேயே அமைச்சரவைக்குப் பத்திரம் வரும். அந்தவகையில்தான் தாமதம் ஏற்பட்டுள்ளது. எனினும், ஓரிரு வாரங்களில் அமைச்சரவைக்குக் குறித்த பத்திரம் நிச்சயம் வரும் - என்றார்.



# இலங்கையின் சொந்தமான கச்சதீவை இந்தியாவுக்குத் தாரைவார்க்கோம்!

## ராஜபக்ஷ அரசு திட்டவட்டம்

யாழ்ப்பாணத்துக்கு அருகிலுள்ள கச்சதீவு இலங்கைக்கே சொந்தமானது. கச்சதீவு ஒப்பந்தத்தில் இது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எக்காரணம் கொண்டும் இந்த தீவை இந்தியாவுக்குத் தாரைவார்க்கமாட்டோம்.

-இவ்வாறு அமைச்சர் விமல்வீரவன்ஸ தெரிவித்தார்.

இந்தியாவின் மத்திய கப்பல் மற்றும் தரைவழிப் போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் வி.கே.சிங், கச்சதீவை இலங்கையிடமிருந்து மீளப்பெறுவது தொடர்பில் ஆலோசித்து வருகின்றோம் என்று அண்மையில் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் ஊடகங்களிடம் அமைச்சர் விமல் வீரவன்ஸ கருத்துரைக்கும்போதே மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அன்று இந்தியாவின் ஓர் அங்கமாக இருந்த கச்சதீவை, இந்திய மத்திய அரசு, ஒப்பந்தம் மூலம் இலங்கைக்கு முழுமையாக வழங்கிவிட்டது.

இந்தநிலையில், இன்று இந்திய அரசியல்வாதிகள் கச்சதீவை உரிமை கோருவதை நினைக்கும்போது வேடிக்கையாகவுள்ளது.

ஒப்பந்தத்தின்படி கச்சதீவிலுள்ள அந் தோனியார் ஆலயத் திருவிழாவில் இரு நாட்டு மக்களும் ஒவ்வொரு வருடமும் கலந்துகொள்வார்கள். தமிழக மீனவர்களும் இந்தத் தீவில் தங்கித் திரும்பு வார்கள்.

அதற்காக இலங்கையின் சொத்தான கச்சதீவை இந்தியாவுக்கு நாம் தாரை வார்க்கமாட்டோம். தமிழக மீனவர்களையும் எல்லை தாண்டி மீன்பிடிக்க அனுமதி வழங்கமாட்டோம் - என்றார்.

# அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் திடீர் இராஜினாமா!



அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாய கம் நாலக கலுவேவ தனது பதவியை திடீரென இராஜி நாமா செய்துள்ளார்.

தனிப்பட்ட காரணத்தா லேயே அவர் தனது பத வியை இராஜினாமா செய்துள்ளார் என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இன்று தெரிவித்தார்.


# மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.


# தலவாக்கலையில் கோர விபத்து: யுவதி பரிதாபச் சாவு; தாய் காயம்



தலவாக்கலை - சென்.கிளயார் - டெவோன் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து இன்று அதிகாலை 5.20 மணியளவில் இடம்பெற்றது எனத் திம்புள்ளை பத்தனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

லொறி ஒன்றும், ஓட்டோ ஒன்றும் மோதுண்டே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

நுவரெலியாவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த சுகாதார அமைச்சுக்குச் சொந்தமான லொறியும், கொழும்பிலிருந்து நானுஓயா நோக்கிப் பயணித்த ஓட்டோவுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த யுவதியே உயிரிழந்துள்ளார். உயிரிழந்த யுவதியின் தாய் படுகாயமடைந்துள்ளார்.

மேலும், ஓட்டோ சாரதிக்கு எந்த வித காயங்களும் ஏற்படவில்லை எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்தில் உயிரிழந்த 25 வயதான கணேன் நித்யாவின் சடலம், கொட்ட கலை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

ஓட்டோ சாரதிக்கு நித்திரை ஏற்பட்டமையே இந்த விபத்துக்கான காரணமாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இவ்விபத்து தொடர்பில் ஓட்டோ சாரதியும், லொறியின் சாரதியும் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள்ளை பத்தனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முற்போக்கு நோக்கமுடைய, ஜனநாயக மற்றும் நலன்புரி நாடாக பாகிஸ்தான்!

## உயர்ஸ்தானிகர் முஹம்மது சாத் கட்டாக் தெரிவிப்பு





பாகிஸ்தானின் 81ஆவது தேசிய நிகழ்வுகள் கொழும்பிலுள்ள பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகராலயத்தில் நேற்று செவ்வாய்கிழமை உயர்ஸ்தானிகர் முஹம்மது சாத் கட்டாக் தலைமையில் நடைபெற்றது.

முற்போக்கு நோக்கமுடைய, ஜனநாயக மற்றும் நலன்புரி நாடாக பாகிஸ்தானை மாற்றல் என்ற தொனிப் பொருளில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயமும் இலங்கைவாழ் பாகிஸ்தான் சமூகமும் இணைந்து தேசிய தினத்தைக் கொண்டாடினர்.

லாகூரில் 1940 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை நினைவு கூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாதம் 23 ஆவது திகதி பாகிஸ்தான் தேசியதினம் கொண்டாடப்படுகின்றது.

இந்த வரலாற்றுத் தீர்மானமானது துணைக்கண்டத்தின் முஸ்லிம்களுக்கு தனித்தாயகமொன்றை வேண்டி நின்றது. அதனூடாக 1947 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14 ஆம் திகதி பாகிஸ்தான் என்ற தனிநாடு உருவானது.

இந்நிலையில் நேற்றைய தினம் நடைபெற்ற தேசிய தின நிகழ்வில் உயர்ஸ்தானிகர் முஹம்மது சாத் கட்டாக் தேசியகீதம் இசைக்கும் தருணத்தில் பாகிஸ்தான் தேசியக்கொடியை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்துவைத்தார்.

அதனைத்தொடர்ந்து பாகிஸ்தான் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் சிறப்புச்செய்திகள் வாசிக்கப்பட்டன.

இதன்போது இரு தலைவர்களும் பாகிஸ்தான் தேசியதினத்தின் முக்கியத்துவம் பற்றி குறிப்பிட்டதுடன் காயித் – இ – அஸாம் முகம்மது அலி ஜின்னா, டாக்டர் அல்லாமா முஹம்மது இக்பால் உள்ளிட்ட அனைத்துத் தலைவர்களுக்கும் நன்றியை வெளிப்படுத்தினர். அத்தோடு இந்நிகழ்வில் இலங்கைவாழ் பாகிஸ்தானியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# போதைவஸ்துடன் தொடர்பு; 110 சந்தேக நபர்கள் கைது!

போதைப்பொருள் தொடர்பில் பொலிஸாரால் முன்னெடுக்கப்படும் சுற்றிவளைப்புக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன.

அதற்கமைய திங்களன்று நாட்டின் பல பிரதேசங்களிலும் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களில் போதைப்பொருளுடன் தொடர்புடைய 110 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

கடற்படையினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய பளை பொலிஸ் அதிகாரிகளால் அப்பிரதேசத்தில் 239 கிலோ கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சா தொகையைக் கொண்டு சென்ற சிறிய ரக வாகனமொன்றும் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட இரு சந்தேகநபர்களும் நேற்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுக்கமைய 7 நாள்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளனர். பளை பொலிஸாரால் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை எல்பிட்டிய பொலிஸாரால் 3 கிராம் ஹெரோயினுடன் பெண்ணொருவரும், முகத்துவாரம் பொலிஸாரால் 4 கிராம் ஹெரோயினுடன் பிரிதொரு சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. – என்றார்

# நாளாந்தம் விபத்துகளில் 10 பேர் உயிரிழக்கின்றனர்

நாட்டில் வீதி விபத்துக்களால் நாளாந்தம் 9 முதல் 10 பேர் உயிரிழக்கின்றனர். அதற்கமைய கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற விபத்துக்களால் 9 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

திங்களன்று இடம்பெற்ற வீதி விபத்துக்களால் 9 மரணங்கள் பதிவாகியுள்ளன. இவற்றில் 6 மரணங்கள் திங்களன்று இடம்பெற்ற விபத்துக்களின் போதும், ஏனைய 3 மரணங்களும் இதற்கு முன்னர் இடம்பெற்ற விபத்துக்களின் போதும் ஏற்பட்டவையாகும்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் பாதசாரிகள் மூவரும் , மோட்டார் சைக்கிள்களில் சென்ற மூவரும் , பயணிகள் மூவரும் உள்ளடங்குகின்றனர். தற்போது நாளொன்றுக்கு வீதி விபத்துக்களால் 9 – 10 பேர் உயிரிழப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அதற்கமைய வருடத்துக்கு சராசரியாக சுமார் 3 ஆயிரத்து 650 பேர் விபத்துக்களால் உயிரிழக்கக் கூடும்.

சாரதிகள் மற்றும் பாதசாரிகள் முறையாக போக்குவரத்து விதிகளை பின்பற்றுவதன் மூலம் இவ்வாறான விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். அத்தோடு வீதி பாதுகாப்புடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களும் உரிய நடவடிக்கைகளை முறையாக முன்னெடுக்க வேண்டும். – என்றார்.

# ஹொங்கொங்குக்கு ஏற்றுமதி செய்ய முற்பட்ட ஒரு தொகை சுறாக்கள் மீட்பு!





சட்டவிரோதமான முறையில் ஹாங்கொங்கிற்கு ஏற்றுமதி செய்வதற்காக கொழும்புதுறைமுகத்தின் சுங்க ஏற்றுமதி பிரிவுக்கு கொண்டுவரப்பட்ட ஒரு தொகை சுறா மீன் துடுப்புகள் இலங்கை சுங்கப் பரிவு அதிகாரிகளால் கடந்த திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட உலர்ந்த சுறா துடுப்புகளின் மொத்த எடை 250 கிலோ கிராம் என்பதுடன் அவற்றின் பெறுமதி 20 லட்சம் ரூபா எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சுறாக்களின் துடுப்புகளின் பங்கைப் பெறுவதற்கு 300 இற்கும் மேற்பட்ட சுறா மீன்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் சுங்க அதிகாரிகள் மதிப்பிட்டுக் கூறியுள்ளனர்.

இலங்கையின் மீன்வள மற்றும் நீர்வளச் சட்டத்தின் கீழ், 15.06.2017 அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு 2023/15 இன் பிரகாரம், இந்த மீன் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுமதி செய்வதற்கு ஏற்றுமதி உரிமங்களை முன்கூட்டியே பெற வேண்டும்.

ஒரு கிலோ சுறா துடுப்புகள் 400 அமெரிக்க டெலரையும் விட அதிக விலைக்கு விற்க்கப்படுவதுடன், சீனர்கள் இந்த சுறா துடுப்புகளை ஆடம்பர உணவை தயாரிக்க பயன்படுத்துகின்றனர். ஏற்றுமதிக்காக சுறா துடுப்புகளின் பங்கை கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டுவந்த நீர்கொழும்பைச் சேர்ந்த ஏற்றுமதி நிறுவனத்தின் பணிப்பாளரிடம் இது தொடர்பில் அறிக்கை பதிவிடவும் சுங்கப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இலங்கை சுங்க பல்லுயிர், கலாசார மற்றும் தேசிய பாரம்பரிய பாதுகாப்பு பிரிவின் அதிகாரிகள் சுங்க பணிப்பாளர் ஜெனரல், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் விஜிதா ரவிப்ரியாவின் வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையின் கீழ் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இராஜகிரியவில் கோர விபத்து; பொலிஸ் உட்பட இருவர் சாவு!

கொழும்பு, ராஜகிரிய பகுதியில் நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒரு பொலிஸ் அதிகாரி உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெலிகடை மேம்பாலம் மற்றும் ஆயுர்வேத சுற்றுவட்டத்துக்கு இடைப்பட்ட பகுதியில் வாகனங்களை பரிசோதனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உப பரிசோதகர் (வயது 52) ஒருவரும் லொறியொன்றின் உதவியாளர் ஒருவருமே விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

குறித்த இருவரும் மீதும் வேகமாக பயணித்த வான் மோதியதன் காரணத்தாலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

விபத்தை ஏற்படுத்திய வானின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், ஆரம்பகட்ட விசாரணைகளில் அவர் தலவத்தகொடை பகுதியைச் சேர்ந்தவர் எனவும் தெரியவந்துள்ளது.

இந் நிலையில் இது தொடர்பான விசாரணைகளை வெலிகடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கடந்த சில மாதங்களாக நாடு முழுவதும் இடம்பெறும் வாகன விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும், இதுபோன்ற விபத்துக்களால் தினசரி சுமார் பத்து பேர் உயிரிழக்கின்றனர் எனவும் பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் றோஹண கூறினார்.

# போலி நாயணத் தாள்கள் பொலிஸார் எச்சரிக்கை!

நாட்டில் தற்போது போலி நாணயத்தாள்கள் புழக்கத்திற்கு வரும் அபாயம் இருப்பதால் எதிர்வரும் சித்திரை புத்தாண்டுக் காலத்தில் அவதானமாக இருக்குமாறு பொதுமக்களிடம் பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

கடந்த சில நாள்களாக 5,000 ரூபா போலி நாணயத்தாள்களை அச்சிட்ட சிலர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

குறித்த விடயம் தொடர்பாக பொலிஸ் ஊடக பேச்சாளரும், பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் றோஹண தெரிவிக்கையில் –

எதிர்வரும் புத்தாண்டு காலப்பகுதியில் விசேடமாக பொதுமக்கள் மத்தியில் இந்த போலி நாணயத்தாள்கள் புழக்கத்திற்கு வரக்கூடும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குற்றச் செயல்களில் ஈடுப்பட்டுள்ளோர் இதனை மக்கள் மத்தியில் சாதுர்யமான முறையில் பயன்பாட்டுக்கு கொண்டு வரக்கூடும். இவ்வாறான நாணயத்தாள் கிடைக்கும் சந்தர்ப்பத்தில், உண்மையான நாணயத்தாளா? என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

பாரியளவில் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவோர் இதுதொடர்பாக கூடிய கவனம் செலுத்த வேண்டும். 5 ஆயிரம் ரூபா நாணயத்தாள் உங்களுக்கு வழங்கப்படும் பட்சத்தில் அதன் உண்மையான அடையாளங்கள் மூலம் அதனை உறுதி செய்ய உங்களால் முடியும்.

நீங்கள் வியாபார நிலையம் ஒன்றை நடத்துவோராயின், இதுதொடர்பாக கூடுதலான கனவம் செலுத்த வேண்டும். எவரேனும் பணத்தை செலுத்தும் போது இதுதொடர்பில் விழிப்புடன் செயற்பட வேண்டும். – எனத் தெரிவித்துள்ளார்.

# கண்காணிப்புக் கமெராக்கள் வவுனியாவில் பொருத்துதல்!

வவுனியா நகரில் இடம்பெற்று வரும் குற்ற செயல்களை தடுப்பதற்கு நகரின் முக்கிய சந்திகளில் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வவுனியா நகரில் இடம்பெறும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந் நடவடிக்கையில் நகரில் காணப்படும் முக்கிய சந்திகளில் முதற்கட்டமாக கண்காணிப்பு கமெராக்கள் பொருத்தும் நடவடிக்கை வவுனியா வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் வர்த்தகர்களின் பங்களிப்பில் இடம்பெற்று வருகின்றது.

அத்துடன் வவுனியா தலைமை பொலிஸாரின் 24 மணி நேரக் கண்காணிப்பில் குறித்த கமெராக்கள் அனைத்தும் கண்காணிப்படுவதற்கும் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வர்த்தக நிலையங்கள், நகருக்கு வரும் பயணிகளின் நன்மை கருதியும் நகரில் இடம்பெறும் குற்றச் செயல்களை தடுக்கவுமே இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிங்கராஜாக் காட்டுக்குள்ளும் சீன நிறுவனம் சூழற்படுகொலையில் கோட்டா அரசாங்கம்

## பொ. ஐங்கரநேசன் கண்டனம்

இலங்கையின் சிங்கராஜாக் காடு உலகில் எஞ்சியிருக்கும் மிகத்தொன்மையான மழைக் காடுகளில் ஒன்று. இதனைக் கருத்திற் கொள்ளாது, இந்த ஆதிக் காட்டுக்குள்ளே இரண்டு பாரிய நீர்த்தேக்கங்களை அமைக்கும் திட்டத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்திருக்கிறது. இவற்றை நிர்மாணிப்பதற்காகச் சீன நிறுவனமொன்றுடன் ஒப்பந்தமும் செய்யப்பட்டுள்ளது. உலகின் உயிர்ப் பல்வகைமை மிக்க வெகுசில இடங்களில் ஒன்றாகப் பாதுகாக்கப்படும் சிங்கராஜாக் காட்டைச் சீர்குலைப்பது சூழற்படுகொலையே அன்றி வேறல்ல. இனப்படுகொலையாளிகளான இவர்களுக்கு இது ஒரு பொருட்டாகவே இல்லை என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஐக்கிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கப்பட்டுள்ள காடழிப்புக்கு எதிரான போராட்டம் தொடர்பாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைமை அலுவலகத்தில் பொ. ஐங்கரநேசன் நிகழ்த் திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தனது கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த இடமான அம்பாந்தோட்டையின் வீரக்கெட்டிய நகரத்துக்கு ஜின் கங்கையில் இருந்தும் நிலவள கங்கையில் இருந்தும் தண்ணீர் கொண்டு செல்வதற்காகவே சிங்கராஜக் காட்டின் உள்ளே இரண்டு நீர்த்தேக்கங்களைக் கட்டும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது. நீர்ப்பாசன அமைச்சரும் ராஜபக்ஷ சகோதரர்களில் ஒருவருமான சமல் ராஜபக்ஷவால் அழிக்கப்படும் காட்டுக்குப் பதிலாகப் புதிதாகக் காடு உருவாக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார். பல்லாயிரக்கணக்கான வயதுடைய இந்தக் காட்டை எந்தப் புதிய காட்டாலும் ஈடுசெய்ய முடியாது.

இலங்கையின் மிகமுக்கிய பன்னிரு ஈரவலயங்களில் ஒன்றான நீர்கொழும்பின் முத்துராஜவெல கண்டற் சூழலும் அழிவைச் சந்திக்கத் தொடங்கியுள்ளது. சரணாலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த முத்துராஜவெல வனஜீவராசிகள் திணைக்களத்திடம் இருந்து இப்போது நகர அபிவிருத்திச் சபையிடம் கைமாற்றப்பட்டுள்ளது. பல இடங்களில் சரணாலயத்தின் பெயர்ப் பலகைகள் அகற்றப்பட்டு தனியார் நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள் நாட்டப்பட்டுள்ளன. ஒருபுறம், ஏற்கனவே கொழும்பின் குப்பைகளால் நிரப்பப்பட் டுக்கொண்டிருக்கும் முத்துராஜவெல ஈரநிலம், இன்னொரு புறம் அபிவிருத்தியின் பெயராலும் நிரப்பப்படவுள்ளது.

இலங்கையின் அரசியற் ஸ்திரத்தன்மை பற்றிக் கருத்திற் கொள்ளாமல் சீன சார்பு நிலையெடுத்து இலங்கையை வல்லரசுகளின் போட்டிக் களமாக்கியுள்ள அரசாங்கம் இப்போது இலங்கையின் சூழல் ஸ்திரத்தன்மையையும் சீர்குலைப்பதில் முனைப்பாக ஈடுபட்டு வருகின்றது. இவை தென்னிலங்கைச் சம்பவங்கள் என்று நாம் பேசாது இருக்க முடியாது. இயற்கைச் சூழலுக்கு எல்லைகள் இல்லை. இவை தென்னிலங்கையை மாத்திரம் அல்ல் ஒட்டுமொத்த இலங்கையையும், உலகையும் பாதிக்கப்போகின்ற சூழற் பேரழிவுகள். இவற்றின் காரணமாகத் தென்னிலங்கையில் காடழிப்புக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுத்துள்ள பேராட்டத்தை நாம் வரவேற்கிறோம்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸா அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தபோதும் சரி, இப்போதும் சரி தமிழ் மக்களின் போராட்டம் தொடர்பான நியாயப்பாடுளை ஏற்றுக் கொண்டவராகவோ, இனப்படுகொலைக்கு நீதி வேண்டுபவராகவோ, வடக்கு கிழக்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வளச் சுரண்டல்களுக்கு எதிராகக் குரல் கொடுப்பவராகவோ இருந்தவர் அல்லர். ஆனாலும் சூழலியம் என்ற கோட்பாட்டைத் தேசியத்தின் ஒரு கூறாகவும் விளங்கிக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இதன் காரணமாக ஐக்கிய மக்கள் சக்தி முன் னெடுத்துள்ள சூழற்படுகொலைக்கு எதிரான போராட்டத்துக்குத் தனது தார்மீக ஆதரவை வழங்குகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.















இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.03.2021 இல் வெளியிடப்பெற்றது.